# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 27 வெள்ளிக்கிழமை (13-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:17


வெறிச்சோடிய யாழ்நகரம்




நல்லூர் கிளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

(படங்கள்: தேவராஜன்)

## நேற்றைய ஹர்த்தாலால்

# குடாநாடு முடங்கியது!

## நகரங்கள், வீதிகள் வெறிச்சோடின

யாழ்ப்பாணம்,டிசெம்பர்13

**நெல்லியடிப் பகுதியில் ஈ.பி.டி.பியினரை வெளியேறுமாறுகோரி ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்கள் மீதும் அப்பாவி வர்த்தகர்கள் மீதும் பொலீஸார் மேற்கொண்ட கொடூரமான தாக்குதலைக் கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று யாழ்.குடாநாடு பூராகவும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

**இதனால் அனைத்துப் பிரதேசங்களிலும் அன்றாட நடவடிக்கைகள் முற்றாக முடங்கின என்று பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.**

யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஹர்த்தாலுக்கு சகல செயற்பாடுகளையும் நிறுத்தி அமைதியான முறையில் மக்கள் தமது ஆதரவைப் பூரணமாக வழங்கினார்கள்.

அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

ஜி.சீ.ஈ.சாதாரன தரப் பரீட்சைக்கு மாணவர்கள் செல்வதற்கென பாடசாலை பஸ்கள் காலையில் சேவையில் ஈடுபட்டன. இவற்றைத் தவிர

(16ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய அரசு அமைக்க ஜனாதிபதி நிபந்தனை

கொழும்பு,டிசெ.13

முன்னைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் சகல அரசியல் கட்சிகளும் பேச்சுகள் நடத்திய பின்னர் அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் தீர்க்கமான அரசியல் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த யோசனைகளை செயற்படுத்துவதற்கு இந்த அரசு தயார் என்றால் தேசிய அரசு அமைப்பது குறித்து பரிசீலிக்க முடியும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்று 8 வருடங்கள் பூர்த்தியடைவது தொடர்பாக நேற்று அநுராதபுரத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

- தேசிய அரசு அமைப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பதின்மூன்று கட்சிகளோடும் விரிவான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

சமாதான முயற்சிகளை நான் எப்போதும் முழுமனதுடன் ஆதரித்து வந்துள்ளேன். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதுதான் பிரச்சினைக்குத் தீர்வாகும்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை நான் கொலைகாரனாகவே கருதுகின்றேன். ஏனெனில், புலிகள் ஆயுத பாணிகளாகவே உள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜேர்மன் அமைச்சு அதிகாரி தமிழ்ச்செல்வனை சந்திப்பார்

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை வருகைதந்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிரிவின் அதிகாரியான டாக்டர் முல்லர், இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவிருக்கிறார்.

அவருடன் ஜேர்மன் தூதர் ஜெஹான் எலியாஸ், ஜேர்மன் தொழில நுட்பக் கூட்டுத்தாபன இலங்கைக்கான பணிப்பாளர் டாக்டர் ஹேராலன் ஸ்ரெயர் ஆகியோரும் இந்தச்சந்திப்பில் பங்குபற்றுகின்றனர்.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுப் பணிகளில் ஜேர்மனியின் பங்களிப்பு தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது.

நேற்றுமாலை யாழ்ப்பாணம் வந்தடைந்த இக்குழுவினர், யாழ். ஆயரைச் சந்தித்து கலந்துரையாடி யாழ்மாவட்ட நிலைமை குறித்து கேட்டறிந்தனர். (ஐ-3)

# கைதானோருக்கு விலங்கு பூட்டி சிகிச்சையளிப்பதற்கு ஆட்சேபம்!

வலி.வடக்கு,டிசெ.13

நெல்லியடியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட 14 பேரில் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் ஐவரையும் விலங்கிட்ட நிலையில் வைத்து சிகிச்சைக்கு உட்படுத்துவது குறித்து கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சிறுவன் உட்பட ஐந்து இளைஞர்கள் கைகள், கால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் பொலீஸாரின் பாதுகாப்புடன் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களை பார்வையிடுவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற இளைஞர்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் நேற்று அங்கு காவலில் இருந்த சிறைச்சாலைக் காவலர்களிடம் இது குறித்து தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்தினர்.

காயமடைந்தோரை விலங்கு பூட்டி வைத்து சிகிச்சை அளிப்பது மனிதாபிமான நடைமுறைகளுக்கு விரோதமானது என்று கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து கைதிகள் ஐவரினதும் விலங்குகள் அகற்றப்பட்டன. (ஐ-86-9)

# ஈ.பி.டி.பி. முகாம்மீது வெடி குண்டுத் தாக்கு!

வலி.வடக்கு,டிசெ.13

மல்லாகம் சந்திப் பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. முகாம்மீது நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வெடிபொருள் ஒன்று வீசப்பட்டது. இது பெற்றோல் குண்டாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்த வெடிபொருள் வெடித்ததால் முகாமின் முன் பகுதி தீப்பற்றி எரிந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் நான்கு புலிகள் கைதாகி பிணையில் விடுவிப்பு

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு பெண் போராளிகள் உட்பட நான்கு உறுப்பினர்கள் நேற்று அம்பாறையில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்தமை, வீதி ஒழுங்கை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் அம்பாறை உதயபுர காவலரணில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட நான்கு புலிகளும் அம்பாறை நீதிமன்ற நீதிவான்முன் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை தலா 250 ரூபா ரொக்கப்பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதித்தார். (ஐ)

# நெல்லியடி சம்பவம் போன்று இனி நடக்க அனுமதியோம்!

## சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி வர்த்தகர்களிடம் உறுதி

வடமராட்சி,டிசெ.13

நெல்லியடியில் வர்த்தகர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலீஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டாது.

வடபிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பி.எம்.பிரேமரத்தின மேற்கண்டவாறு உறுதி மொழி வழங்கினார்.

நெல்லியடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவத்தையடுத்து இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் நேற்று கூட்டப்பட்ட மாநாட்டிலியே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வடபிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பி.எம்.பிரேமரத்தின, உதவி பொலீஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி, நெல்லியடிப் பொலீஸ் நிலையப

(16ஆம் பக்கம் பார்க்க)

### நெல்லியடி இன்று வழமைக்கு

வடமராட்சி,டிசெ.13

இரு நாள்கள் இடைவெளிக்குப் பின்னர் நெல்லியடியில் இன்று வெள்ளிக்கிழமை முதல் கடைகள் திறக்கப்படும் என நெல்லியடி வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### இத்தாலி செல்கையில் எகிப்தில் கைதான

# 167 இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்

கொழும்பு, டிசெ.13

சட்டவிரோதமாக படகுமூலம் இத்தாலிக்குச் சென்றுகொண்டிருக்கையில் எகிப்து அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட 167 இலங்கையர் நேற்று திருப்பி அனுப்பப்பட்டனர்.

விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்ட அவர்கள் நேற்று முற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் விமானத்தில் அவர்களை அழைத்து வந்த எகிப்திய அதிகாரி

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



'பேர் கொவ் பவுண்டேசன்' அமைப்பின் பணிப்பாளர் நோபேட் ஹோபர் மற்றும் உறுப்பினர்களுடன் தென்னாபிரிக்க நீதிபதி அல்பீ சச்சஸ் (முதல்படத்தில் இரண்டாவதாக உள்ளவர்) நேற்று 'யாழ் பீச் இன்' விடுதியில் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

கலந்துரையாடலில் பங்குபற்றிய விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் தமிழ்விழி, அருட்திரு.ஏ.ஐ.பேனாட், கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட பிரதித் தலைவர் பேர் சான்டர் ஸ்கர்விக் (Per Sander Skarvik), கடற்படை பதில் பிராந்தியத் தளபதி பி.எல்.என். ஒபயசிங்க ஆகியோரும் -

மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், முன்னாள் யாழ்.அரச அதிபர் தேவநேசன் நேசையா, பேராசிரியர் செ.சிஞானசுந்தரம் (நந்தி) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்:தேவராஜன்)*

# பொலீஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.13

நெல்லியடியில் அமைதி வழியில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு தாக்குதலுக்கு பொறுப்பான சகல பொலீஸார் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இப்படி பிரதமருக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளது யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்.

குடாநாட்டில் செயற்படும் 45 அமைப்புக்களின் சார்பில் பிரதமருக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகளை அந்த ஒன்றியத்தின் பிரதிநிதிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் யாழ். அலுவலகங்களில் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ கடந்த 10.12.2002 ஆம் திகதி நெல்லியடியில் பொலீஸார் மேற்கொண்ட தேவையற்ற அத்துமீறல்கள் தொடர்பாக நேற்று ஒன்றுகூடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் 45 பொது அமைப்புகள் இவற்றைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் எனத் தீர்மானித்துள்ளமை பற்றி தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

★ 10.12.2002 ஆம் திகதி நெல்லியடியில் இடம்பெற்ற அமைதியான ஆர்ப்பாட்டத்தைக் கையாளும்போது கடைகளுக்குள் புகுந்து வர்த்தகர்களை வெளியில் இழுத்தும், பொருள்களை வாங்க வந்தவர்களையும் கடும் மிருகத்தனமாகத் தாக்கியும், ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா நியமங்களையும் மீறியுள்ளனர்.

★ துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஐவரும் பாரிய உடற் காயங்களுடன் வேறு ஐந்து அல்லது ஆறு பேரும் மந்திகை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

★ ஊடகவியலாளர் தவச்செல்வன் கைக்குண்டு வீச்சில் காயமடைந்துள்ளார். இவர் குறிவைத்துத் தாக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

★ வன்முறை வழிகளைப் பின்பற்றி பீதியையும், சமாதானத்திற்குப் பங்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அமைதியையும் சமாதானத்தையும் பேணவேண்டிய பொலீஸார், மேற்கொண்ட கண்மூடித்தனமான சூட்டு நடவடிக்கை மற்றும் தாக்குதல்களாலேயே இவையெல்லாம் நிகழ்ந்துள்ளன.

ஆர்ப்பாட்டப் பேரணி கலைந்து பல மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்த 14 அப்பாவிப் பொது மக்களை பொலீஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் யாவரும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் முன்பும் யாழ்.பதில் நீதிவான் முன்பும் ஆஜர் செய்யப்படுவதற்கு முன்பு மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

★ இவர்களுள் ஐவரை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்குமாறு வைத்திய அதிகாரிகள் விடுத்த பணிப்பை மீறியதன் மூலம் பொலீஸார் பாரிய மனித உரிமை மீறலைப் புரிந்துள்ளனர். இதனிலும் மோசமானது பதில் நீதிவானது இவ்வாறான கட்டளையையும் அவர்கள் மீறியது ஆகும்.

★ மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10 ஆம் திகதி பொலீஸார் இந்த அத்துமீறல்களையும், மனித உரிமை மீறல்களையும் புரிந்தமை ஆச்சரியத்துக்குரியவை.

★ பொலீஸார் புரிந்துணர்வு - யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி, துவக்குகளைப் பாவித்தமை மிகவும் கவலைக்குரியதாகும். இவையெல்லாம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு எடுக்கப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகள் எனக் கருத யாழ்ப்பாண மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

★ ஆகவே, பின்வருமாறு தங்களைக் கோருகின்றோம்.-

1) ஒரு சுயாதீன விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்.

2) புரிந்துணர்வு ஒப்பந்த மீறல், மனித உரிமை மீறல் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தியமைக்குப் பொறுப்பான எல்லா பொலீஸார் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நெல்லியடி வர்த்தக சமூகத்தினரை சிரேஷ்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் சந்தித்து இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் நடைபெறாது என உத்தரவாதமளிக்க வேண்டும் எனப் பணிக்க வேண்டும். இந்த வர்த்தகர்கள் இவ்வாறான உத்தரவாதம் கிடைக்கும் வரை கடைகளை திறப்பதில்லையென முடிவு செய்திருப்பதால் இந்த உறுதிமொழி அவசியமாகிறது.

(ஐ-8-10-86)

## கோப்பாய் பாலம் பகுதியில்
# குளிக்கப் போய் கைதான 11 பேருக்கும் பிணை

யாழ்ப்பாணம்,டிசெ.13

கோப்பாய் பாலத்துக்கு அருகே உள்ள நீர் நிலையில் குளித்துக் கொண்டிருந்தபோது படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் என்று கூறப்படும் 11 பேர் நேற்று யாழ்.நீதிமன்றினால் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் கோப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். பொலீஸார் அவர்களை நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியமை, படையினர் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்தமை போன்ற குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இவர்கள் அனைவரையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், பிரதி சனிக்கிழமை தோறும் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

ஆஜர் செய்யப்பட்ட 11 பேரின் பெயர்கள் வருமாறு:-

சந்திரபோஸ் சிவகண்ணன், பசுபதி விக்னேஸ்வரன், குணரட்ணம் வாமதேவன், கந்தசாமி இராஜேந்திரன், ஆறுமுகம் தர்க்காறூபன், சின்னத்துரை சுதாகரன், பசுபதி கஜேந்திரன், தெய்வேந்திரம் ஆனந்தம், றஞ்சன் முரளி, கனகலிங்கம் குணசீலன், பாலசிங்கம் யோகேஸ்வரன்.

இவர்கள் அனைவரும் உரும்பிராய் தெற்கு, செல்வபுரத்தைச் சேர்ந்தவர்களாவர். (ஐ-10-8)

# அரியாலை பாடசாலை இன்று நிர்வாகத்திடம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிகளை 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் அகற்றியதையடுத்து அந்தப் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறும் இந்த கையளிப்பு நிகழ்வில் 'ஹலோ ரஸ்ட்' நிறுவன அதிகாரியான சைமன் போட்டர், பாடசாலையின் அதிபர் பி.நடராசா, நல்லூர் பிரதேச செயலர் ரி.தேவராஜா, அரியாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன், 'யுனிசெவ்' பிரதிநிதி செலீன் லக்றோய்ற் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொள்வர்.

அரியாலை பகுதியில் கண்ணிகள் அகற்றப்படாமல் இருந்ததால் பார்வதி வித்தியாலயம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

(ஐ-3)

# துறைநீலாவணையிலிருந்து அதிரடிப்படை வெளியேற்றம்

பாண்டிருப்பு,டிசெ.13

மட்டக்களப்பு - துறைநீலாவணைப் பொதுநூலகம், கல்லாறு - துறைநீலாவணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான துறைநீலாவணை 5ஆம் வட்டார கூட்டுறவுக் கடை என்பவற்றில் முகாமிட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் தமது முகாமை விட்டு கடந்த 11ஆம் திகதி மாலை வெளியேறிச் சென்றனர்.

இங்கிருந்த விசேட அதிரடிப் படையினர் தமது தளபாடங்கள் சகிதம் காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமிற்குச் சென்றுள்ளனர்.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இப்படைமுகாமும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்படைமுகாம் இயங்கிவந்த காலகட்டத்தில் பொது மக்கள் எதிர்கொண்ட அசௌகரியங்கள் குறித்து திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளையும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். (ஐ)

## புத்தளம் வானில் ஒளிப்பிழம்பு!

புத்தளம்,டிசெ.13

புத்தளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மிகவும் பிரகாசமான வெளிச்சத்துடன் ஒளிப்பிளம்பொன்று பறந்து சென்றதை மக்கள் அவதானித்தனர்.

இரவு 10 மணிக்கும் 11 மணிக்குமிடையே சுமார் 15 அடி நீள இந்த ஒளிப்பிளம்பு வானத்தில் பறந்து சென்றது. எதுவித சத்தமுமின்றி தாழ்வாக குறைந்த வேகத்தில் அது பறந்து சென்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலத்தில் பேசப்பட்டு வரும் பறக்கும் தட்டாக அது இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (ஐ)

## விநாயகமூர்த்தி பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

நெல்லியடியில் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பிரதமரைக் கோரியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வன்மையாக கண்டிப்பதாகவும் -

பொலீஸ்மா அதிபர் ஊடாக விசாரணையை உடனடியாக நடத்தும்படியும் -

அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ-3)



நெல்லியடிச் சம்பவம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறுகோரி பொது அமைப்புக்களின் சார்பில் யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகராவிடம் மகஜர் கையளிக்கிறார்

# காணாமற்போன 3 சிறுமிகள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.13

கடந்த சில நாள்களாக உறவினர்களால் தேடப்பட்டு வந்த மூன்று சிறுமிகள் வவுனியாவில் வைத்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு யாழ். மாவட்ட அரசியல்துறை ஊடாக நேற்று இங்குள்ள உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இந்த மூன்று சிறுமிகளும் கடந்த மாதம் திடீரெனக் காணாமற்போயிருந்தனர். சுமார் 15, 16 வயதுடைய இம்மூன்று சிறுமிகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தனரா என்று அவர்களது உறவினர்கள் யாழ்.மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் விசாரித்துள்ளனர்.

இவர்கள் புலிகள் அமைப்பில் இணையவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்ததையடுத்து உறவினர்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

இம்மூவரும் கடந்த 30 ஆம் திகதி வவுனியாவில் வைத்து ஓட்டோ சாரதி ஒருவரால் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து யாழ்.மாவட்ட அரசியல்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இந்தச் சிறுமிகளுக்கு அறிவுரை கூறி அவர்களின் பெற்றோருடன் அனுப்பிவைத்தார்.

சிறுமிகளை பெற்றோரிடம் கையளிக்கும் வைபவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் பி.சந்திரசேகராவும் பிரசன்னமாகியிருந்தார். (ஐ-4)

# ஸ்பெயின் ~ மொரோக்கோ உறவுகள் சீரடைகின்றன

மட்றிட்,டிசெ.13

மொறோக்கோ மற்றும் ஸ்பெயின் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் புதனன்று ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் சந்தித்து இரு நாடுகளுக்கு இடையிலான இராஜிய ரீதியான உறவுகளைச் சீராக்குவது குறித்துப் பேசியுள்ளனர்.

பிறிஜெல் என்ற சிறிய தீவு ஒன்று தொடர்பாக கடந்த ஜூலையில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டது.

புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பு இராஜீக ரீதியில் இருநாட்டு உறவுகளையும் சீராக்குவதற்கு வழிவகுத்ததாக இரு தரப்புகளும் தெரிவித்தன. இரு நாடுகளும் திருப்பி அழைத்துக்கொண்ட தத்தம் நாட்டுத் தூதுவர்களை மீண்டும் அனுப்புவதற்கும் இரு அமைச்சர்களும் இணங்கியுள்ளனர்.

இம்முறை நடந்த பேச்சுக்கள் முன்னேற்றகரமானவையாக இருந்தன என்று இரு தரப்புகளுமே தெரிவித்தன. இந்தப் பேச்சுக்கள் கடந்த செப்ரெம்பரில் நடப்பதாக இருந்தது. ஆனால், இறுதி நேரத்தில் மொரோக்கோ சந்திப்பை ரத்துச் செய்துவிட்டது. தனது வான்பரப்பில் ஸ்பானிய விமானங்கள அத்துமீறி நுழைந்ததாகக் குற்றஞ் சாட்டியே மொரோக்கோ சந்திப்பை ரத்துச் செய்தது.

**பின்னணி**

ஸ்பெயினின் கொலனியாக விருநத நாடு மொரோக்கோ. இரு நாடு களுக கும் இடையில் உள்ள சிறிய தீவான பிறிஜெல் தீவுக்கு தற்போது இரு நாடுகளுமே உரிமை கோரி வருகின்றன. கடந்த ஜூலையில் அந்தத் தீவில் நிலைகொண்டிருந்த மொரோக்கோ நாட்டவர்களைப் பல வந்தமாக அகற்றிவிட்டு அங்கு ஸ்பானியப் படைகள் நிலைகொண்டன.

இதையடுத்தே இருநாடுகளுக்கும் இடையிலான இராஜீய உறவுகளில் பெரும் விரிசல் ஏற்பட்டது. அந்த மாதத்திலேயே மொரோக்கோவிலிருந்து தனது தூதுவரை ஸ்பெயின் மீளப்பெற்றது. இதற்குப் பதிலடியாக எந்தக் காரணமும் கூறாமல் ஒக்ரோபர் மாதம் தனது தூதுவரை மொரோக்கோ திருப்பி அழைத்தது. (ம)

பிறிஜெல் தீவில் ஸ்பானியப் படையினர்.



# 'ஸ்கட்' ஏவுகணைகள் யேமனுக்கே சென்றன!

## உறுதிப்படுத்துகின்றது அமெரிக்கா

வாஷிங்ரன்,டிசெ.13

வடகொரியாவில் இருந்து கப்பலில் எடுத்துச்செல்லப்பட்ட 'ஸ்கட்' ஏவுகணைகள் யேமன் நாட்டுக்கே எடுத்துச்செல்லப்பட்டன என்பதை அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது. இதற்கான அனுமதி ஏற்கனவே பெறப்பட்டிருந்ததாகவும் அது கூறுகிறது. இருந்தாலும் அவை ஏன் சிமேந்துப் பைகளால் மறைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டமையே சந்தேகத்துக்குரியது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் கொலின் பவல் செய்தியாளர்களிடம் மேற்கண்ட தகவல்களை தெளிவுபடுத்தினார்.

'ஸ்கட்' ஏவுகணைகளுடன் சென்று கொண்டிருந்த வடகொரியக் கப்பலான சோ சான் ஆபிரிக்கக் கடலில் வளைகுடாவிற்கு அருகே ஸ்பெயின் போர்க்கலங்களால் தடுத்து நிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

அந்தக் கப்பல் எந்த நாட்டுக் கொடியையும் பறக்கவிடாமல் இருந்ததாலேயே அது தடுத்து நிறுத்தப்பட்டது. அதில் 15 'ஸ்கட்' ஏவுகணைகளும் மோட்டார்களும் வேறு ஆயுதங்களும் இருந்தன.

இந்தக் கப்பல் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே கொலின் பவல் மேற்படி தகவல்களை வெளியிட்டார். அந்த ஆயுதங்களை தமது பாதுகாப்புத் தேவைக்காக மட்டுமே கொண்டு செல்லப்படுகின்றன என்றும் -

அவை எக்காரணம் கொண்டும் வேறு எந்த நாட்டுக்கும் மாற்றப்படாது என்றும் -

யேமன் உத்தரவாதம் அளித்த பின்னரே கப்பல் வடகொரியாவில் இருந்து புறப்பட அனுமதிக்கப்பட்டது என்று பவல் மேலும் கூறினார்.

இதற்கிடையில் -

அந்தக் கப்பல் ஏன் கொடியைப் பறக்கவிடாமல் சென்றது என்றும் -

சிமெந்துப் பைகளால் ஆயுதங்கள் ஏன் மறைக்கப்பட்டிருந்தன என்றும் அமெரிக்கா அறிய விரும்புவதாக வெள்ளை மாளிகை பேச்சாளர் அரிபிளெய்சர் கூறினார்.

யேமன் அரச தரப்புக்கும் கொலின் பவலுக்கும் இடையில் நடந்த உயர் மட்டப் பேச்சுக்களின் பின்பே கப்பல் புறப்படும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

அந்தக் கப்பலில் எடுத்துச்செல்லப்பட்ட பொருள்கள் ஒரு 'முக்கிய பயங்கரவாத' நாட்டுக்கே எடுத்துச் செல்லப்பட்டன என்றும் அவர் கூறினார். எனினும், அந்த நாடு எது என்பதை அவர் குறிப்பிடவில்லை.

ஸ்பானிய ஹெலியிலிருந்து கப்பலுக்கு இறங்கும் கடற்படை வீரர்கள்.



இத்தகைய பொருள்களை பறிமுதல் செய்வதற்கு சர்வதேச சட்டத்தில் இடமில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை -

அமெரிக்கா ஆரம்பித்துள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அதற்கு யேமனின் உதவி அவசியமாகவுள்ளது. அதனாலேயே ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய அமெரிக்கா யேமனுக்கு அனுமதி அளித்துள்ளது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ம)



ஸ்பானிய கடற்கலம் ஒன்றிலிருந்து கப்பலை குறிவைத்திருக்கும் கடற்படை வீரர்கள்.

# அணு ஆயுதங்களையும் பயன்படுத்தத் தயங்கோம்!

## ஈராக்குக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்ரன்,டிசெ.13

ஈராக்மீது அணு ஆயுதங்கள் உட்பட அனைத்து ஆயுதங்களைக் கொண்டும் தாக்குதல் நடத்தத் தயங்கமாட்டோம் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

ஈராக்குடன் போர் ஏற்பட்டால் அதில் என்னென்ன வழிவகைகளைக் கையாள வேண்டும் என்ற ஓர் அறிக்கையை அமெரிக்கா தயாரித்துள்ளது. அந்த 6 பக்க அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் தோழமை நாடுகளின் பாதுகாப்பு எங்களுக்கு முக்கியம் அதற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில், பேரழிவு விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தினால், ஈராக்மீது அணு ஆயுதங்கள் உட்பட அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991இல் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தின்போதும், இதேபோன்று அப்போதைய அதிபர் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# 'கௌரவக் கொலை'கள் பாகிஸ்தானில் அதிகரிப்பு

இஸ்லாமாபாத்,டிசெ.13

பாகிஸ்தானில் இந்த ஆண்டு மட்டும் 461 பெண்கள் தமது குடும்ப உறுப்பினர்களாலேயே கொல்லப்பட்டுள்ளனர். அங்கு இயங்கும் சுதந்திர மனித உரிமை ஆணைக்குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.



நான்குக்கு மேற்பட்ட கிராமவாசிகளால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண் தனது தாயருடன் காணப்படுகின்றார்.

இது கடந்த வருடத்தை விட 25 வீதம் அதிகம் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 'கௌரவக் கொலைகள்' என்று அந்த அமைப்பு அழைக்கும் இத்தகைய 372 கொலைகள் கடந்த ஆண்டில் செய்யப்பட்டுள்ளன.

இதில் வேதனைக்குரியது என்னவென்றால் இந்தக் கொலைகளைச் செய்தவர்களை பொலீஸார் கைது செய்வதோ விசாரணை செய்வதோ இல்லை என்பதுதான் - என்றார் ஆணைக்குழுவின் பணிப்பாளர் கமிலா ஹயட்.

தமது குடும்பத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படும் பெண்களை குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றும் முகமாக அவரது உறவினர்களே கொலை செய்வது பாகிஸ்தானிய கிராமப் புறங்களில் வழமை.

இவ்வருடம் இவ்வாறு கொலை செய்யப்பட்ட பெண்களில் 300 பேர் தெற்கு மாகாணமான சிந்து மாகாணத்திலும் 161 பேர் மத்திய மாகாண மான பஞ்சாப்பிலும் 'கௌரவ கொலை' செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகைய மேலும் பல கொலைகள் பதிவுகள் எதுவும் இல்லாமலேயே மூடி மறைக்கப்பட்டு விடுவதாக மனித உரிமை ஆணைக்குழு மேலும் தெரிவிக்கின்றது. (ம)

# கியூபாவில் ரயில் விபத்து!



கியூபாவில் இடம்பெற்ற ரயில் விபத்தில் பதினைந்துபேர் கொல்லப்பட்டனர். மேலும் 73 பேர் காயமடைந்தனர். அவர்களில் 11பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. நாட்டின் பிரதான ரயில் பாதையில் சென்றுகொண்டிருந்த பயணிகள் நிறைந்த ரயில் வளைவு ஒன்றில் திரும்பும்போது தடம்புரண்டது. விபத்துக்குள்ளான ரயில் பெட்டிகளில் மீட்புப் பணிகள் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.


விழாக் கால வசந்தத்தில்....

லக்ஷ்மியுடன்

உங்கள் வாழ்விற்கு

மேலும் புத்துணர்வு!

பிளாஸ்ரிக் பாய்கள் – கம்பளங்கள்

பண்டிகைக் கால

விலைக்குறைப்பு


| அளவுகள் | விற்பனை விலை | பண்டிகை விலை |
|---|---|---|
| 3x6 | 142.50/= | 130/= |
| 4x6 | 225/= | 200/= |
| 6x9 | 590/= | 550/= |
| 9x12 | 1200/= | 1150/= |
| 2x25 | 525/= | 500/= |

லக்ஷ்மி விநியோகஸ்தர்கள்

(C-25318) இல.257, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

TVS

# உங்கள் தரிப்பிடத்தை அடையுமுன்பே மகிழ்ச்சியைக் கண்டடைவீர்கள்




2 வருடத்திற்கு/30,000கி.மீ உத்தரவாதம்

இலவச பிரயாண ஆடை

ரூபா. 82,000/- +VAT

TVS Victor
More smiles per hour

புதிய TVS விக்டர், ஒவ்வொரு சவாரியின் போதும் மகிழ்ச்சியைத் தருகிறது. செவ்வக வடிவத்திலான பெட்டி. இருமருங்கும் ஊசலாடும் கைப்பிடி. நீண்ட அகலமான இருக்கை. ஏனையவற்றுக்கு மத்தியிலும் இலங்கையின் பாதைகளுடாக சௌகரியமான சவாரிக்கு உத்தரவாதம். ஏனைய முக்கிய அம்சங்களோடு ஒவ்வொரு மைல்கற்களுக்குப் பிறகும் மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ள உங்களால் முடியும்.

4 ஸ்ட்ரோக் 110 CC • ஒரு லீட்டருக்கு 85 கிலோமீற்றர் சிக்கனப்பயணம் • 8.1 B.H.P. • உயர்தர டிஜிட்டல் எரிபொருள் எரிவு • செவ்வக வடிவப் பெட்டியில் இருபுறம் ஆடும் கைப்பிடி • HI சக்தி கொண்ட பலதடவை பிரதிபலிக்கும் முகப்பு விளக்கு

மேலதிக விபரங்களுக்கு ஏகவிநியோகஸ்தர்கள்:

**சுசுகீ மோட்டர்ஸ் லங்கா லிமிடெட்**

795, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தைகொழும்பு-14
தொலைபேசி: 542883 பெக்ஸ்: 440889
(அங்கீகரிக்கப்பட்ட நாடுமுழுவதற்குமான விற்பனையாளர்கள்)

உதயன்

## வழங்கிய உறுதிமொழியை சரிவரச் செயற்படுத்துக!

நெடுந்தீவில் தற்போது தங்கியுள்ள தனது கட்சி உறுப்பினர்களை அரைவாசியாகக் குறைக்கத் தாம் இணங்கியிருப்பதாக ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா கூறியிருக்கின்றார்.

சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என்று கருதி பிரதமரின் கோரிக்கையைப் பெருமனதுடன் ஏற்றுக்கொண்டு இந்த நடவடிக்கைக்குத் தாம் இணங்கியதாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. யுத்தநிறுத்த ஏற்பாடுகள் இந்த ஒப்பந்தத்தின்கீழ் வரையறை செய்யப்பட்டன.

அப்போதே நெடுந்தீவு குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழான யுத்தநிறுத்த ஏற்பாடுகளில் முக்கியமானது வடக்கு - கிழக்கில் அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்ற திட்டவட்டமான வரையறை செய்யப்பட்டமையாகும்.

இந்த வரையறையின்கீழ் நெடுந்தீவு எந்தப் பகுதிக்குள் வரப்போகின்றது என்று அப்போதே கேள்வி எழுப்பப்பட்டது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட சமயம் நெடுந்தீவில் இராணுவமோ, கடற்படையோ, பொலீஸோ இருக்கவில்லை. முழுக்க முழுக்க ஈ.பி.டி.பியின் ஆயுதம் தாங்கிய ஒரு குழுவே அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

நெடுந்தீவு தமது கட்டுப்பாட்டில் இல்லை, எங்கள் அதிகாரம் அங்கு செல்லாது என்பதை இலங்கை அரசின் சட்டரீதியான காவல் அமைப்பு - பொலீஸ் - நீதிமன்றத்திலேயே பகிரங்கமாகத் தெரிவித்திருந்த காலம் அது.

குடாநாட்டில் பரபரப்பை ஏற்படுத்திய முக்கிய கொலை வழக்கு ஒன்றின் சந்தேக நபர் ஒருவர் நெடுந்தீவில் ஒளிந்திருந்தார் எனக் கருதப்பட்டது. அவரைக் கைதுசெய்யும்படி பொலீஸாருக்கு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது. இரண்டு வாரகாலத்தின் பின்னர் நீதிமன்றில் தோன்றிய யாழ். பொலீஸார் அங்கு தமது அதிகாரம் செல்லாது என்பதை ஒப்புக்கொண்டனர். பிடி ஆணை உத்தரவை கடற்படையிடம் வழங்கினார் நீதிவான். அதுவும் பலன் தரவில்லை.

சட்டத்தை மீறி அவ்வளவு செல்வாக்குடன் - அரச அரவணைப்புடன் - நெடுந்தீவை ஒரு தசாப்த காலம் கலக்குக்கலக்கிய ஈ.பி.டி.பியின் அதிகாரத்தை மீண்டும் அங்கு நிலைநிறுத்தச் செய்வதில் பொலீஸும், கடற்படையும் கண்ணாய் நிற்கின்றன.

ஆயுதம் தாங்காத ஜனநாயகக் கட்சிகளைக் கூட தேர்தல் பிரசாரத்துக்குத் தீவகத்துக்குள் வரவிடாமல் வெட்டியும், சுட்டும், கோரமாகப் படுகொலை செய்தும், படுகாயம் ஏற்படுத்தியும் அட்டகாசங்கள் புரியப்பட்டதைத் தமிழ்மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.

ஏ.கே. 47 ஆயுதங்களுடனும், இயக்கப்பாணிச் சீருடைகளுடனும் புரியப்பட்ட இந்தக் கொடூரத்தை தீவக மக்களே செய்தனர் என்று பின்னர் இலகுவாக மக்கள்மீது பழிசுமத்தி குற்றச்சாட்டை திசை திருப்ப முயன்றவர்கள் ஈ.பி.டி.பியினர்.

அத்தகையோர் மக்கள் இப்போது சுதந்திரமாகச் செயற்படக் கிடைத்த வாய்ப்பை வைத்துக்கொண்டு தங்களுக்கெதிராகக் கெம்பி எழுந்திருப்பதை, புலிகள் தூண்டிவிட்ட போராட்டம் என்று காட்டமுயல்கின்றனர்.

எது, எப்படியாயினும் நெடுந்தீவு விவகாரம் குறித்து - அங்கும் குடாநாட்டில் பரவலாகவும் மக்கள் முன்னெடுத்துவரும் போராட்டங்கள் குறித்து - அரசு ஒரு தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய கட்டம் வந்துள்ளது. அதுதான் யதார்த்தம்.

வெறுமனே கூட்டங்களைக்கூட்டி, டக்ளஸ் போன்றோரின் 'பெருமனது' பிரகடனங்களை வெளியிட வழிசெய்வதால் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

நோர்வேயில் நடந்த மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது இது விடயமாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளைச் செயற்படுத்த அரசுத்தரப்பு முனைவதே சாலச்சிறந்தது.

சமாதானப் பேச்சின் முன்னேற்றத்துக்கு மட்டுமல்ல; குடாநாட்டின் அமைதிக்கும், யுத்தநிறுத்த ஏற்பாடுகளின் சீரான அமுலாக்கத்தை உறுதிசெய்வதற்கும் அதுவே உகந்தது.

# குடாநாட்டு பொலீஸ் நிலையங்களில் ஜனவரி முதல் முறைப்பாடுகள் தமிழில்!

## யாழ்.பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்குடாநாட்டிலுள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் முறைப்பாடுகள் அனைத்தும் தமிழில் பதிவு செய்யப்படும் என்றும் -

இதற்கென ஒவ்வொரு பொலீஸ் நிலையங்களிலும் தலா இரண்டு தமிழ்ப் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் -

யாழ்.மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் எட்வேட் விதாரண தெரிவித்துள்ளார்.

யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது :-

தமிழில் முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதன்மூலம் இதுவரைகாலமும் நிலவிவந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

அதேவேளை - யாழ்நகரப் பகுதியில் கொள்ளை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனவே, சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய பணிகளை படிப்படியாக கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

சாரதி அனுமதிப்பத்திரத்தை(லைசென்ஸ்) எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைவரும் பெற்றிருக்கவேண்டும் எனப் பொலீஸார் அறிவித்துள்ளனர் என்றும் -

இதனைப் பெற்றுக்கொள்வதற்கான கால எல்லையை எதிர்வரும் ஏப்ரல் மாதம்வரை நீடிக்குமாறும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'லைசென்ஸ்' வழங்குவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைவருக்கும் உரிய அனுமதிப்பத்திரங்களை வழங்கமுடியாது என எனக்கு அறியத் தருவார்களானால், அதற்குரிய கால அவகாசத்தை நீடிப்பது பற்றி நாம் தீர்மானிப்போம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

## சமூக நலன்புரி அமைச்சின் புனர்வாழ்வுத் திட்டம்

வலி.மேற்கு,டிசெ.13

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் விதவைகள், கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றினை சமூகநலன்புரி அமைச்சு யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை சகல பிரதேச செயலகங்களிலுமுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி கால்நடை வளர்ப்புக்கு 11ஆயிரம் ரூபாவும் கோழி வளர்ப்புக்கு 10ஆயிரத்து 500 ரூபாவும் சிறுகடை அமைப்பதற்கு 10ஆயிரத்து 500 ரூபாவும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சமூக நலத்துறைத் திணைக்களம் இத்திட்டத்திற்கான நிதியை வழங்கவுள்ளது. அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் நடைபெறவுள்ள அமைச்சின் நடமாடும் சேவையின்போது இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நிதி வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-175)

# சமாதானநீதிவான்கள் பொதுப்பணியோடு தமது கட்சிக்காகவும் பாடுபட வேண்டும்!

## வரவேற்பு விழாவில் கூ.சங்கத் தலைவர் உரை

நல்லூர்,டிசெ.13

சமாதான நீதிவான் நியமனங்கள் கட்சி, அரசியல் சார்ந்தவையே. எனவே புதிதாக நியமனம் பெறும் சமாதான நீதிவான்கள் பொதுப்பணி புரிவதோடு தாம் சார்ந்த கட்சிக்காகவும் உழைக்கவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்திக் கூறினார் நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவரும் கூட்டணிப் பிரமுகருமாகிய பெ.கனகசபாபதி.

நல்லூர்ப் பிரதேசத்தில் புதிதாக நியமனம் பெற்ற சமாதான நீதவான்கள் மூவரை பாராட்டி கௌரவிக்கும் விழா அண்மையில் திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

லயன் வ.பரமசிவம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதான நீதிவான்களின் நடத்தைகள் தொடர்பான விமர்சனங்கள் எழுப்பப்பட்டுவருகின்றன. தகுதி மற்றும் திறமை என்பவற்றின் அடிப்படையிலேயே இந்த மூவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் தமது பிரதேச மக்களுக்கு தம்மால் இயன்ற சேவைகளைச் செய்யவேண்டும் என்றும் கனகசபாபதி அங்கு தெரிவித்தார்.

சமாதான நீதிவான்களாக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட ஆசிரியர் சி.பத்மராஜா களஞ்சியப் பொறுப்பாளர் கு.அருள்நாயகம், ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தரும் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான இ.இரத்தினசபாபதி ஆகியோர் பொன்னாடை போர்த்து, மாலையணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

செம்மணி இந்துமயானா அபிவிருத்தி சங்கப் பொருளாளர் தணிகைநாதன் பாராட்டுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

யுத்தத்தால் சீரழிந்த இங்கிலாந்து தேச மக்களின் மேம்பாட்டிற்காக அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே சமாதான நீதிவான் பதவியாகும்.

குடாநாடு இப்போது போருக்குப் பிந்திய சூழலில் உள்ளது. அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் இப்போது அவசிய தேவையாக உள்ளன. அதற்கு சமாதான நீதிவான்கள் தம்மால் இயன்றதைச் செய்யவேண்டும் - என்று தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களான லச்சுமிகாந்தன், சண்முகநாதன் மற்றும் சமாதான நீதிவான் செல்லத்துரை ஓய்வுபெற்ற ஆசிரியர் நடராசா, துரைமணி உட்பட பலர் வாழ்த்துரைகள் வழங்கினர். (ஐ-ரி)

## பண்டத்தரிப்பில்

# சுயதொழில் முயற்சிக்கு யு.என்.டி.பி. நிதியுதவி

சண்டிலிப்பாய்,டிசெ.13

பண்டத்தரிப்பு பல நோ.கூ. சங்கப்பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு சுய தொழில் முயற்சிக்கு கடனுதவி வழங்கும் நோக்குடன் ஐ.நா அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி.பி.) இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, பெரியவிளான், மாரீசன் கூடல், இளவாலை, வடலியடைப்பு, பிரான்பற்று ஆகிய இடங்களில் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் இவ்வாறு கடனுதவியைப் பெறவுள்ளன என்றும் -

இவ்வாறு மீளக்குடியமர்ந்தவர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம் மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இந்த கடனைப் பெற்று பயனடைய முடியும் எனவும் சங்கப் பொது முகாமையாளர் சு.வைரவநாதன் தெரிவித்தார். (எ-135)

**நாளை**

**கார்த்திகை 28**
**சனிக்கிழமை**
**(14.12.2002)**
**திதி : தசமி**
**பிற்பகல் 5.14வரை.**
**நட்சத்திரம்: ரேவதி**
**முன்னிரவு 8.44 வரை.**
**சுபநேரம் : 3.21 - 4.51**
**ராகுகாலம் : 9.21 - 10.51**
**(பழைய நேரப்படி)**

**உதய வாக்கு**

யோக்கியன் பிறரையும் யோக்கியமானவர் என்றும் -

அயோக்கியன் பிறரை அயோக்கியர் என்றும் -

எண்ணி ஏமாந்து போகிறார்கள்.

# புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு பயணக் கட்டணம் 10 ரூபா

வலி.வடக்கு,டிசெ 13

தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் செல்பவர்களிடம் இருந்து பயணக்கட்டணமாக போய் வர 10 ரூபா அறவிடப்படவுள்ளது.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்து சிகிச்சை நடைபெறும் நாள்களில் காலை 8 மணிக்கு இப்போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர் வரும் 17 ஆம், 18 ஆம் திகதியில் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புற்றுநோய் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களின் நன்மை கருதி வைத்தியசாலை வளவினுள் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் தேநீர்சாலை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பததினியம்மா திலகநாயகம் போல் அறிவித்துள்ளார். (ஒ-86)

# தென்மராட்சிப் பிரதேசத்துக்கு 3 பிரதேச செயலர் பிரிவுகள் தேவை

## பொது அமைப்புகள் கோரிக்கை

தென்மராட்சி,டிசெ.13

தென்மராட்சிப் பிரதேசத்தை மூன்று பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்குமாறு பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரை கோரியுள்ளது.

சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி மேற்கு என மூன்று பிரிவுகளாகப் பிரித்து சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய இடங்களில் பிரதேச செயலகங்களை அமைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் தற்போது 60 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. யுத்தத்தினால் சிதைவடைந்த இப்பிரதேசத்தைக் கட்டியெழுப்ப மூன்று பிரதேச செயலகங்கள் அவசியம்.

- இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மூன்று மாடிகள் கொண்ட பிரதேச செயலகம் சாவகச்சேரியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஒ-117)

# இனவாத சக்திகளுக்கு இந்தியா ஒருபோதும் துணை போகக்கூடாது!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.13

இலங்கையின் சமாதான முயற்சிகளைக் குழப்பமுயலும் இனவாதச் சக்திகளுக்குத் துணைபோகாமல் அந்த முயற்சிகள் வெற்றிபெற இந்தியா முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டியது அவசியம்.

- இவ்வாறு ஈபிஆர்எல்எவ் (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுமூலம் தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் இலங்கை இறைமை, ஒற்றுமைக்குட்பட்டு இத்தீர்வு இருக்கவேண்டும் என்பதையும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. 1987ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அந்த அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடம் என்பதை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் முதற்பந்தியே ஏற்கின்றது. இதனடிப்படையில்தான் தமிழ் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ஒரே அரசியல் நிர்வாக அலகாக கடந்த பதினைந்து வருடங்களாக இருந்து வருகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்போது ஒற்றையாட்சி, அரசியல் சாசனத்துக்குள் அதிகாரங்கள் பகிரப்பட்டு ஒரு பிரதேச சுயாட்சி ஏற்படுத்தப்பட்டது. அதற்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் பட்டனவாகவே இருந்தன. அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதையும், அவை முழுமையானதாக இருக்கவேண்டும் என்பதையும் மாகாண ஆட்சியின்போது எமது கட்சி இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் வலியுறுத்தி வந்துள்ளது.

இன்று ஒற்றை ஆட்சி அரசமைப்பு என்பதற்குப் பதிலாக, சமஷ்டி அரசியல் அமைப்புக்குள் பிரதேச சுயாட்சி என்பதை தமிழர் தரப்பில் புலிகளும், இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன. அதிகாரங்கள் தொடர்பாக இனி மேல்தான் பேசியாகவேண்டும்.

இந்திய அரசு விரும்பியவாறே யுத்தம் நிறுத்தப்பட்டு, இலங்கையின் ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைக்காண இரு பகுதியினரும் இணங்கியுள்ளமை இந்தியாவுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். இந்தியாவும் கூட ஓர் அரைச் சமஷ்டியமைப்பைக் கொண்ட நாடாகும். எனவே, இலங்கையில் ஒரு சமஷ்டி அமைப்புமுறை ஏற்படுவதை இந்தியா எதிர்க்காது என்று நாம் நம்பலாம்.

இலங்கையில் தமிழர்களுக்கு தனிநாடு என்பது, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பாதகமாக இருக்கும் என இதுவரை டெல்லி அரசு கூறிவந்தது. இலங்கையில் இப்பொழுது தனிநாடு என்ற கோரிக்கை கைவிடப்பட்டுள்ளமையானது டெல்லியின் அச்சத்தைப் போக்கியிருக்கும் என்பதையும் நம்பலாம்.

இந்நிலையில் இப்பேச்சுக்கு ஆதரவளித்து, நிரந்தரமான தீர்வொன்றைக்கான இந்திய அரசு தனது முழுமையான பங்களிப்பைச் செய்வதற்கான காலம் வந்துள்ளதாகவே எமது கட்சி கருதுகின்றது. இலங்கை இந்திய கலாசார உறவுகளும், பொருளாதார உறவுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைக்கப்பட்டவை. எமது அண்டை நாடான இந்தியா அரசியல், பொருளாதார தொழில்நுட்ப விடயங்களில் மிகவும் வளர்ச்சியடைந்த மிகவும் பலமான நாடு என்பதுமட்டுமல்ல. அது எமது தாய்நாடு என்பதிலும் நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா பங்களிப்பு செய்வதற்கான தகுந்த காலம் வந்துவிட்டதாகவே நாம் கருதுகின்றோம்.

குறுகிய கட்சி இலாபங்களை நோக்கமாகக் கொண்டு இப்பேச்சுக்களை குழப்பவும், இதற்குத் துணையாக இந்தியாவை தம்முடன் இழுத்துக்கொள்ளவும் சில இனவாத சக்திகளும், ஜனாதிபதி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் முயற்சித்து வருகின்றன. இவர்களின் இக்கபட நோக்கங்களை இந்தியா புரிந்துகொள்ளுமென உறுதியாக நம்புகின்றோம். இந்தியா இன்று நடைபெறும் பேச்சுகளை ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூறி இந்தியாவிற்குக் களங்கம் கற்பிக்க முற்படும் தமிழ், சிங்கள இனவாத சக்திகளுக்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுக்கும் எனவும் நாம் உறுதியாக நம்புகிறோம் - என்றுள்ளது. (ம-3)



யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கென ஜப்பான் ஜென் நிறுவன உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்கள் அண்மையில் யாழ்.மாவட்ட கமநல சேவைத்திணைக் களத்தில் வைத்து கடனடிப்படையில் விநியோகிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

*படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்*

# கச்சாயில் மணல் அகழ்வதை தடுக்கும்படி கோரும் மகஜர்

## கிராம அபிவிருத்திச் சங்கம் அனுப்பியது

கொடிகாமம்,டிசெ.13

கச்சாய்ப் பகுதியில் மணல் அகழப்படுவதால் அப்பிரதேச வளம் பாரியளவில் சீரழிந்துள்ளது. இவ்வாறு கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்கம் முறைப்பாடு தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தென்மராட்சிப் பிரதேச செயலாளர், யாழ்.அரச அதிபர் மற்றும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ மண்வளத் துறையினர், விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியற் பணிமனையினர், பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

எமது பிரதேச மண்வளம் யுத்தத்தினால் அழிவடைந்துள்ள எமது பிரதேசத்ததைக் கட்டியெழுப்பக்கூட போதுமான தல்ல. இந்த நிலையில் எமது மண் தென்மராட்சியைத் தவிர்ந்த வேறு பிரதேசங்களிற்கு பெருமளவு நாளுக்கு நாள் எடுத்துச்செல்லப்பட்டு வருகிறது. கச்சாய்க்கடல் விவசாய நிலங்களில் இருந்து 300 மீற்றர் தூரத்தி லேயே உள்ளது. தற்போது மணல் விவசாய நிலம் வரை, கடல் மட்டத்தை விட ஆழமாகவும், கடற்கரையோர தென்னைமரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டும் அகழப்படுகிறது. இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் கடல் நீர் கிராமத்திற்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான மணல் அகழ்வில் ஈடுபடும் மணல் முகவர்கள் கோயிற் காணிகள், பராமரிப்பற்ற காணிகள் போன்ற இடங்களில் மணல் அகழ்ந்து லொறிகள்மூலம் கொண்டு செல்கின்றனர்.

தற்போது மழைகாலம் தொடங்கியதை அடுத்து மணல் அகழப்பட்ட காணிகள், குளங்கள் போன்று நீர் நிரம்பியுள்ளன. அல்லாரை ஆலடி வீதி, சங்கிலிக் கிணத்தடி வீதி, புங்கடி வீதி, அம்மன் கோயில் வீதி மற்றும் கடற்கரைக்குச் செல்லும் குறுக்கு வீதிகள், கச்சாயில் இருந்து மீசாலைக்கு செல்லும் மதவடி வீதி, போன்றவை போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன. அம்மன்கோயில் முன் வீதி, மதவடி வீதி போன்றன 50 வருடங்களிற்கு முன்பு அரசாங்கத்தினால் தார் இடப்பட்டு போடப்பட்ட வீதியாக இருந்த போதும் பல வருடங்களாக செப்பனிடப்படவில்லை. தற்போது மணல் வியாபார வாகனங்களால் சீரழிந்துள்ளது.

இவ்வீதி தவிர்ந்த ஏனைய வீதிகள் நீண்ட காலமாக மணல் ஒழுங்கையாகக் காணப்பட்டன. இவற்றை 1995ஆம் ஆண்டு பொதுமக்கள் நிதி சேகரித்து புனரமைத்துப் பயன்படுத்தி வந்தனர். தற்போது டிராக்டர் போன்ற வாகனங்கள் இவ்வீதிகளை சேதப்படுத்தி விட்டன.

மணல் உரிமையாளர்கள் பணத்திற்காக வளங்களை அழிக்கிறார்கள். இந்த நிலைமைகளை நேரில் பார்த்து நடவடிக்கை மேற் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கி றோம். அத்துடன் அழிவடைந்து போகின்ற வளங்களை பாதுகாக்கவும், சீரழிந்த வீதிகள், காணிகளை புனரமைக்கவும் முன்வர வேண்டும். இந்த மணல் விற்பனையில் சீருடையினர் மற்றும் அரசியல் தலைமீடுகள் உள்ளன. என்பதையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம் என்று அந்த மகஜரில் உள்ளது. (ஓ-74)

### ஜெனரேற்றர் அன்பளிப்பு

தென்மராட்சி,டிசெ.13

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு சமூக சேவைகள் அமைச்சு புதிய ஜெனரேற்றர் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (எ-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை வீதி, இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள 1, 2, 3 ஒழுங்கை வாழ் மக்கள் மீளக்குடியமர இராணுவ அதிகாரிகளுடன் அயராது தொடர்பு கொண்டு நிர்க்கதியாய் இருந்த மக்களுக்காய் வீதி திறந்தமைக்காக,

கிராம சேவையாளர் (யாழ். கிழக்கு J/74)

**கதிரவேல் நித்தியானந்தன்**

அவர்களை அப்பகுதி பொதுமக்கள் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் நன்றி அறிதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

*பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.* (11683) - 2ஆம் ஒழுங்கை மக்கள்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. வ.சந்திரசேகரம்**

*(கிராம சேவை உத்தியோகத்தர், கந்தர்மடம்)*

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

*வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு.* சீனியர் குணநாயகம் குடும்பத்தினர், செல்லப்பா சற்குணம் குடும்பத்தினர். (11679)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் வாகீஸ்வரியின் தொண்டர்

உயர்திரு.

**வ.சந்திரசேகரம்**

*(கிராம சேவை உத்தியோகத்தர், கந்தர்மடம்)*

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 05. 12. 2002இல் யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி எஸ். இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழக செயலாளரும், வாகீஸ்வரி சனசமூக நிலைய நீண்டகால உறுப்பினரும் சிறந்த ஆலோசகரும் ஆவார்.

*இவரை சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.*

*கோண்டாவில் வடக்கு.* ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையமும் கல்வி வளர்ச்சிக் கழகமும். (11678)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 - 03 - 1923

மறைவு 24 - 11 - 2001

**திருமதி வைரமுத்து சின்னத்தங்கம்**

திதி: 13.12.2002

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர்கள்
ஆதரவாய் அரவணைத்து மகிழ்ந்தீர்கள்
இன்றோடு ஓராண்டு மறைந்தே போனாலும்
இதயத்தில் உங்கள் நினைவு இணைந்தே இருக்கும்

வ. சிவகணேசதாசன் *(மகன்)* *சர்மிளா ரேடர்ஸ், பலாலி வீதி, உரும்பிராய்.* (11681)

உங்கள் பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் கந்தையா இராமையா**

(புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்)

எமது மைத்துனரும் **திரு.த.தங்கராசாவின்** பெரிய தந்தையாருமாகிய **கந்தையா இராமையா** அவர்களது 08. 12. 2002 மறைவுச் செய்தி அறிந்து நாம் பெரிதும் கவலையடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

*பகலோன் களஞ்சியம், 334, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (11666)

சி.சிதம்பரநாதனும் குடும்பத்தினரும் (மைத்துனர்)
த.தங்கராசாவும் குடும்பத்தினரும் (பெறாமகன்)

## மரண அறிவித்தல்

**கந்தையா இராமையா**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராமையா 08.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.12.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புங்குடுதீவு மணல்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புங்குடுதீவு - 10.* (11682) தகவல்: இ.கண்ணையா *(மகன்)*



தென்பகுதியில் இருந்து யாழ்.திருமறைக் கலாமன்றத்திற்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட கலைஞர்கள் 'உதயன்' பணிமனைக்கு விஜயம் செய்தனர். இவர்களில் வண. பிபிலே ஸ்ரீதம்ம தேரர் உட்பட சிங்கள வார இதழான 'சிலுமின' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தினரும் அடங்கியிருந்தனர்.

## கைக்குண்டு வீச்சு!

கண்டி மாநகர சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான ஜெஸ்மின் மரிக்காரின் இல்லம் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. அருகிலுள்ள மரம் ஒன்றில் பட்டு குண்டு வெடித்ததால் வீட்டுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

ஜெஸ்மின் மரிக்காரின் பேராதனையில் உள்ள வீட்டின்மீது கடந்த செவ்வாய் இரவு 8.30 மணியளவில் வாகனத்தில் வந்த ஒரு சிலர் கைக்குண்டை எறிந்து விட்டுச் சென்றனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற பொழுது ஜெஸ்மின் மரிக்கார் வீட்டில் இருந்திருக்கிறார். அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர் என அறியப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து கண்டி பொலிஸார் விசாரணைகள் நடத்தி வருகின்றனர். (எ)

# மருத்துவக் களஞ்சிய அறைப்பூட்டுக்களை உடைத்து மருந்துகளை வழங்கப் பணிப்பு!

## வேலைநிறுத்தம் நீடிப்பதால் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,டிசெ.13

பூட்டப்பட்டிருக்கும் மருந்துக் களஞ்சிய அறைகளின் பூட்டுக்களை உடைத்து தாதிமார் மூலம் வெளி நோயாளருக்கு மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு அரசாங்க வைத்தியசாலைகளின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருக்கிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் துணைமருத்துவ அதிகாரிகள் மருந்துக் களஞ்சிய அறைகளைப் பூட்டிவிட்டே சென்றிருக்கின்றனர். இதனால், நோயாளர்களுக்கு மருந்துகள் வழங்கமுடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

பூட்டுக்களை உடைத்து களஞ்சிய அறைகளைத் திறப்பதால் பிரச்சினை எதுவும் ஏற்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பினையும் ஏற்றுக் கொள்வதாக அமைச்சு தெரிவித்திருக்கிறது.

துணைமருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தத்தை தீர்த்து வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததையடுத்தே அமைச்சு இவ்வாறு ஆலோசனை வழங்கியிருக்கிறது. (எ)

## 15இலங்கையரை நாடுகடத்த ஆஸ்திரேலியா நடவடிக்கை

### மீள் பரிசீலனைக் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,டிசெ.13

ஆஸ்திரேலியாவிலிருந்து தங்களை நாடு கடத்த மேற்கொண்டிருக்கும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு இலங்கையர் சிலர் விடுத்த கோரிக்கையை ஆஸ்திரேலிய அதிகாரிகள் நிராகரித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள் உட்பட சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் பலரை நாடு கடத்துவதென அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

அதிகாரிகளின் இத்தீர்மானத்தை அடுத்து, சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முகாமில் அமைதியற்ற நிலை உருவானது. அவர்களில் 15 பேர் இலங்கையர்களாவர்.

அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பதால் விரைவில் அவர்கள் நாடு கடத்தப்படுவர் என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். (எ)

## முஸ்லிம் காங்கிரஸைக் கட்டிக்காக்க அன்வர் இஸ்மாயில், ஹரீஸ் அழைப்பு

கொழும்பு,டிசெ.13

இ.தொ.காவுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்விற்கும் ஏற்பட்ட கதி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஏற்பட்டு விடக் கூடாது. எனவே தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு சமூக நலன் கருதி காங்கிரஸை கட்டிக்காக்க ஒன்றுபடுவோம் என அம்பாறை மாவட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் எம்.பியான ஹரீஸ் அதிருப்தியாளர்களுக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட எம்.பிக்களான அன்வர் இஸ்மாயில், ஹரீஸ் ஆகியோர் அம்பாறை மாவட்ட காங்கிரஸ் செயற்குழுவினரையும் கிளைக் குழுக்களையும் பொது மக்களையும் சந்தித்து அவர்களின் அபிப்பிராயங்களை அறிந்து வந்துள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடக்கூடாது. தமிழ்க் கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளுக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அவை இரண்டாக உடைந்ததும் தேர்தல் காலத்தில் கட்சியின் சின்னங்களைப் பெறுவதற்கு நீதிமன்றம் வரைசென்று இழுபறிப் பட்டதையும் முன் உதாரணமாகக் கொள்ளவேண்டும் என பிரதேச மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

இம்மக்களின் ஆணையின்படியே அதிருப்தியாளர்களை சந்தித்து மீண்டும் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்த அன்வர் இஸ்மாயில் எம்.பியும் நானும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் ஹரீஸ் எம்.பி. உதயனுக்குத் தெரிவித்தார். (எ)

## ஒத்திவைப்பு

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவிருந்த 'கலாபூஷண விருது' வழங்கும் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணங்களினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது என்றும் -

எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு 7, ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் உள்ள ஜோன் டீ சில்வா கலையரங்கில் குறித்த நிகழ்வு இடம் பெறும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பிரதமர் - ஹக்கீம் விசேட பேச்சு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையே நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தில் விசேட பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக இப்பேச்சுக்கள் அமைந்தன.

அடுத்த ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டிய விதம் குறித்தும், அவற்றிற்கான நிதியை பெற்றுக்கொள்ளும் விதம் குறித்தும் இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நிதியிலிருந்து ஒரு தொகையை இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டது.

அன்வர் இஸ்மாயில், எச்.எம் தௌபீக், எச்.எம்.எம். ஹரிஸ், ரிசாத் பதியுதீன் ஆகிய எம்.பிக்களும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டனர். (எ)

### சனி, ஞாயிறு தினங்களில்

## கைலாசபதி கலையரங்கில் 2 நாள் ஆய்வுக்கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடம் நடத்தும் 'கல்வி ஆய்வில் முழு உளக் காட்சி' என்ற தொனிப்பொருளிலான இரண்டு நாள் ஆய்வுக் கருத்தரங்கு நாளையும் நாளைமறுதினமும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

'சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக் குமான கல்வி' என்ற இலக்கில் நடத்தப்படுகின்ற இந்த ஆய்வுக்கருத்தரங்கு, யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படுகின்ற முதலாவது ஆய்வுக் கருத்தரங்காகும். இக்கருத்தரங்கை யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்துடன் யாழ்பல்கலைக்கழக கல்வியல் துறை மற்றும் கொழும்பு பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடம் என்பன இணைந்து நடத்துகின்றன.

இக்கருத்தரங்கில் தென்பகுதியைச் சேர்ந்த முதுநிலை பேராசிரியர்கள் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களும் கலந்துகொண்டு ஆய்வு தொடர்பான விரிவுரைகளை நிகழ்த்துவர்.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு சகல முதுகல்விமாணி ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கும் பட்டப்பின் படிப்புகள் பீடம் அழைப்பு விடுத்துள்ளது.

இக்கருத்தரங்கில் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை மற்றும் யாழ். பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் இணைந்து தற்போதைய சமாதான சூழ்நிலையில் மேற்கொள்ளும் முதலாவது செயலமர்வு இது எனவும் கூறப்பட்டது.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வருகைதரவுள்ள வளஆளணியினர் விவரம் வருமாறு:-

✱ கல்வியல் பீடத்தை சேர்ந்த தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலைய இயக்குநர் பேராசிரியர் லால் பெரேரா.

✱ கல்வியல் பீடத்தை சேர்ந்த கல்வி உளவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ராஜ குணவர்த்தன.

✱ கல்வியியல் பீட கலாநிதி டபிள்யூ.ஜி. குலரத்ன.

✱ கல்வியியல் பீடத்தைச் சேர்ந்த எச்.எம்.செனவிரத்ன.

✱ கல்வியியல் பீடத்தைச் சேர்ந்த நொலன்ட் அபேபால.

✱ கல்வியியல் பீட இணைப்பாளர் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம். (எ-9)

## ஒளி விழா

குருநகர்,டிசெ.13

குருநகர் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருநகர் கலையரங்கில் தலைவர் அ. யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை வண.பிதா. க.அருட்செல்வன் இந்தவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-51)

# கொழும்பு வெற்றிலை வருகையால் உள்ளூர் உற்பத்திக்குப் பாதிப்பு!

யாழ். மாவட்டத்தில் வெற்றிலையின் விலை வீழ்ச்சியடைந்துவருகின்றது. இதனால், வெற்றிலைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து பெருமளவு வெற்றிலை இங்கு விற்பனைக்காக எடுத்துவரப்படுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

தமது உற்பத்திச் செலவுக்குக் கூட வருமானம் பற்றாமல் இருப்பதாகவும் -

வெற்றிலைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**செய்திக்கட்டுரை**

மருதனார்மடம், சுன்னாகம், திருநெல்வேலி, சங்கானை ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளில் முதற்தரமான வெற்றிலையொன்று 20 சதம் முதல் 25 சதம்வரை விற்பனையாகி வருகின்றது. இரண்டாந்தர வெற்றிலை ஒன்று 10 சதம் முதல் 15 சதம்வரை விற்னையாகிவருகிறது.

இதேவேளை - தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வெற்றிலை ருசியிலும் தரத்திலும் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெற்றிலையிலும் பார்க்க மிகவும் குறைந்த நிலையிலுள்ளதாகக் கூறப்படுகின்றது. முன்னர் வலி.வடக்குப் பிரதேசத்திலுள்ள மாவிட்டபுரம், பன்னாலை, தெல்லிப்பழை ஆகிய இடங்களில் வெற்றிலைச் செய்கையைப் பலர் மேற்கொண்டு வந்துள்ளனர். இப்பகுதிகளில் உற்பத்தியாகும் வெற்றிலைக்கு கடந்த காலங்களில் நல்ல மவுசு இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. பின்னர், இப்பகுதியில் நிலவிய யுத்த அனர்த்தங்கள் மற்றும் மக்கள் இடபபெயர்வுகள் என்பவற்றால் வெற்றிலைச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

தற்போது இளவாலை, சில்லாலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலும் ஏனைய இடங்களிலும் பலர் மீண்டும் பெருமளவில் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்; கூலி ஆள்களை வேலைக்கமர்த்தியே தங்கள் வெற்றிலைத் தோட்டங்களை இவர்கள் பராமரித்து வருகின்றனர். தற்போது வெற்றிலையின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதால் உற்பத்திச் செலவைக்கூட ஈடு செய்ய முடியாத இக்கட்டு நிலையில் இவர்கள் பரிதவித்து நிற்கின்றனர்.

இதேவேளை -

இளவாலை, மாரீசன்கூடல், முள்ளானை ஆகிய இடங்களில் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுவந்த பலர் தொடர்ந்து ஏற்படும் நஷ்டத்தைத் தாங்கமுடியாமல் கைவிட்டு புதிதாக முந்திரிகை உற்பத்திகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

தமிழர் கலாசாரத்தில் வெற்றிலை- மங்களகரமான - இன்றியமையாத ஒன்றாக தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. வீடுகளில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளிலும், அமங்கள நிகழ்வுகளிலும் வெற்றிலை, பாக்கு

### ஊக்குவிக்க அவசர, அவசிய நடவடிக்கைகள் தேவை

முக்கியமாக இடம்பெறும். சைவ ஆலயங்களின் உற்சவங்களிலும் கிரியைகளிலும் வெற்றிலைக்கு முக்கிய இடமுள்ளது. பல வீடுகளில் இன்றும் வெற்றிலைத் தட்டம் பாவனையில் இருந்துவருகிறது. உறவினர்கள், நண்பர்கள் யார் வந்தாலும் வெற்றிலைத் தட்டத்தை கொடுத்து வெற்றிலை போடவைக்கும் பாரம்பரியம் இன்றும் எமது கிராமப்புறங்களில் பழக்கத்தில் இருக்கின்றது.

வெற்றிலையில் மூலிகைச் சத்து உள்ளது. சித்த ஆயுர்வேத வைத்தியத் துறையில் வெற்றிலைக்குச் சிறப்பான இடம் உண்டு. இருமல், சளி ஆகிய நோய்களுக்கு இதன் சாறு சித்த வைத்தியத்தில் பயன்படுத்தப்படுகின்றது. எமது முன்னோர்கள் வீட்டு வைத்தியம் பாட்டி வைத்தியம் ஆகியவற்றில் வெற்றிலையைப் பயன்படுத்தி நோய்களை வைத்திய செலவு எதுவுமின்றி குணமாக்கி வந்துள்ளனர்.

இத்தனை மகிமைமிக்க வெற்றிலைச் செய்கையை மேலும் ஊக்கு

**ந.ம.கந்தசாமி**
*சண்டிலிப்பாய் செய்தியாளர்*

விக்கவேண்டியது மிகவும் அவசியம். விவசாயத் திணைக்களமும் வெற்றிலைச் செய்கையாளருக்கு ஆலோசனைகளை வழங்கி இச்செய்கையை மேலும் ஊக்குவிக்கவேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிலைச் செய்கையை பூச்சித் தாக்கங்கள், வண்டுகள், புழுத் தாக்கங்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்து செய்கை பண்ணுவதற்கு ஏற்ற நவீன தொழில்நுட்ப ஆலோசனைகள் விவசாயத் திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர்களால் வழங்கப்படவேண்டியதும் அவசியமாகும். மற்றைய பயிர்களுக்குத் தெரிவிக்கப்படும் இரசாயன கிருமி நாசினிகளை வெற்றிலைச் செடிக்குப் பயன்படுத்த முடியாது. ஆகவே, இயற்கையாக பெறும் பீடை கொல்லிகளையே பயன்படுத்தவேண்டும். வெற்றிலைகளில் புள்ளிவிழும் பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும் வெற்றிலைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். நமது பாரம்பரிய மங்களகரமான - வெற்றிலையானது பாதிப்படையாதிருக்க வெற்றிலைத் தோட்ட செய்கையாளர்களை ஊக்குவிக்கவேண்டிய பொறுப்பு எமது சமூகத்திற்குள்ளது.

அதேசமயம் - அளவுக்கதிகமாக வெற்றிலையை உண்டு வாயப்புற்று நோய்க்கு ஆளாகாமல் இருப்பது அவசியம். ★

# 'செம்பருத்தி' இதழ் உதிர்ந்த 31ஆம் நாள் நினைவலைகள்

## அமரர்
## கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்
## (கணபதி கணேசன்)

"நோயில் இருந்து மயங்கி வளைந்து
நடங்க் விழுந்தாலும் ~ ஒலைப்
பாயில் நெளிந்து மரணமடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் ~ காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் ~ என்றன்
தாயில் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனா?"



*13.12.2002 அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

- குடும்பத்தினர்.

கௌரி கணேசலிங்கம்
*70, சிவன் கோவில் தெற்கு வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

## இரங்கற் செய்தி

மலேசிய இந்தியர்களுக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு உருப்படியான ஒரு செய்தித்தாள் வரவேண்டும் என்ற எங்களது வேட்கையில், பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், கல்விமான்களை அழைத்து பேசப்பட்டபோது அது பல சந்திப்புக்களாக நீண்டுகொண்டே போய்க்கொண்டிருக்கையில், பத்திரிகையின் நோக்கம், தரம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று முற்றுப்புள்ளி வைத்தவரும், எங்களால் அன்புடன் அய்யா, அப்பா என்று அழைக்கப்பட்டவரும் திரு.கணபதி கணேசன் அவர்கள்.

அவரின் கடின உழைப்பால் ஒரு தரமான செய்தித்தாள் என்பது இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற இலக்கணத்தையே வகுத்து, திரு.இன்துவாப் அவர்களால் பெயர் சூட்டப்பட்ட செம்பருத்தி என்ற செய்தித்தாள், எல்லாதரப்பட்ட மக்களாலேயும் மிகவும் பிரபலமாகப் பேசப்படும் அளவுக்குச் செய்துகாட்டியவர்.

பல்கலைக்கழகங்களில் ஆய்வுக் கட்டுரைகளும், மாணவர்களுக்கு இலக்கிய சிந்தனையைத் தூண்டிவிடுவதற்கும், இந்நாட்டில் நல்ல கவிஞர்களை உருவாக்கியதற்கும் காரணமான அவரது உழைப்பு மிகவும் உன்னதமானது.

செய்தித்தாள் தர்மம் என செம்பருத்தியின்மூலம் அவர் வகுத்துக் கொடுத்த முறைகள் இன்றளவும் பேசப்பட்டுக்கொண்டிருப்பது என்பதற்கு அவரின் சீரிய சிந்தனையே காரணமாகும்.

செம்பருத்தியின் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டிருப்பினும் அவரது பங்கு முழுமையாகவே இருந்தது. எங்களையெல்லாம் அரவணைத்து, அன்போடு அதே நேரத்தில் கண்டிப்புடன் நடத்திச் சென்றது, நிர்வாகத்துறையில் அவரது தனி வெற்றியாகும். தான், இல்லாமல் போனாலும், இந்த செய்தித்தாள் தொடர்ந்து வரவேண்டும் என்ற நோக்கத்திலேயே எங்களையெல்லாம் உருவாக்கியவர். இந்நோக்கம் நம் தலைவர்களிடையே இல்லாமற்போனதே நமது வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

தான், என்ற சிந்தனையில்லாமல் நாம் என்ற உணர்வே, இன்றளவும் அவரை எண்ணி கண்ணீர் கசியச் செய்கிறது.

அய்யாவின் இழப்பு எங்களுக்கு பேரிடியாகும்.

*செம்பருத்தி நிர்வாகத்தினர்,*
*செம்பருத்தி பப்ளிக்கேஷன்ஸ் - மலேசியா.*

## அக வணக்கம்

செம்பருத்தி மாத இதழின் துணையாசிரியர் கணபதி கணேசனின் மறைவு உலகத்தமிழர் நிவாரண நிதித் தொண்டர்களிடையே ஓர் அதிர்ச்சியாகவும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செய்தியாகவும் இருந்தது.

அன்னார் மலேசியாவில் உலகத் தமிழர் நிவாரண நிதி ஆரம்பித்த காலத்தில் இருந்து தமிழீழ மக்களின் துயர் துடைப்பாக நடத்தப்படும் நிகழ்வுகளில் எல்லாம் முக்கிய தூண்களில் ஒருவராக இருந்து செயற்பட்டு வந்தார்.

தமிழீழ மக்களின் வாழ்க்கை நிலையை, பழக்கவழக்கங்களையும் இங்கு வாழும் எமக்கு மிக நேர்த்தியாகவும் விளக்கமாகவும் அறியத்தந்தவர்.

தனது இறுதிக்காலம்வரை தமிழீப் போராட்டம் தமிழீழ மக்களின் துன்பியல்நிலை போன்றவற்றை கட்டுரை, கவிதைமூலம் மலேசிய வாழ் தமிழ்மக்களுக்கு அறியத்தந்தார். அன்னாரின் மறைவு மலேசிய மண்ணில் தமிழீழ ஆதரவாளர்கள் மத்தியில் ஒரு மாபெரும் இழப்பாகும். இவரின் மறைவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினருக்கு உலகத் தமிழர் நிவாரண நிதி அகவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

கி.பசுபதி
அறங்காவலர் உலகத் தமிழர் நிவாரணக்குழு,
உலகத் தமிழர் நிவாரண நிதியம்.

## அன்புயிர் கணபதி கணேசன் தங்கள் அறிவுமதி பேசுகிறேன்

அலைவந்து மெழுகிப்போன கரையில் வானம் தவழ்ந்து கிடப்பதாய் நமது நட்பின் நினைவுகள் நடுநடுவே நண்டுகள் செய்யும் மணற் பூக்களாய் தங்களின் குறும்புகள்.

கதவைக் கண்டுபிடிக்கமுடியாத சுவராய் மிரட்டி... கதவே இல்லாத வெளியாய் உள்வாங்கி வெளியேற அனுமதிக்காத கண்ணாடி சுவராய் மாறிக் கொள்ளும் தூய அன்புக்குரியவர் நீங்கள். தூய்மைதான் உங்களின் மூலதனம். தலைமையிலிருந்து அனைவருக்குள்ளும் தூய்மை... தூய்மை... தூய்மை: அச்சமுடைத்தும் வெற்றிகள் குவித்தும் தூய்மை தன்னலமற்ற தாய்மைகள் செறிந்த விடைகளைத் திறக்கும் தூய்மை. பல தலைமுறைகளாய் நம் மிடமிருந்து நழுவித் தொலைத்த "பண்பியல் வாய்மை" மீளக்கிடைத்துவிட்டது ஆக்கம் படைக்கும் வீரம் தமிழ் மூலைகளில் பற்றி படர்கிறது எழுதுகோலாய் தங்கள் துடிப்பு வெள்ளம் மிரள அசைகிறது.

பாரதியின், வானதியின், கஸ்தூரியின், புதுவையின், காசியின் துடிப்புக்களோடு துடிப்புக்களாய் தங்கள் எழுதுகோலும் உண்மையை உணர்ந்த எழுத்து உங்கள் எழுத்து. ஒவ்வொரு கவிதையின் சொல் அசைவுக்கிடையே பல மாவீரர்கள் எழுந்து எம்மை பார்க்கின்றார்கள். இயக்க வளர்ச்சியின் ஒவ்வொரு நிகழ்வுகளிலிருந்தும் கசிந்திருக்கிறது உங்கள் தமிழ். வடுக்களை காயங்களாக்கி உள் அழைத்து வலி சொல்லும் வல்லமை ஒவ்வொரு கவிதையுள்ளும்.

*ஈழத்தில்..... தமிழகத்தில்... மலையகத்தில்... என காலம் இட்ட கட்டளைக்கு* ஏற்ப மண் பெயரினும் வானம் கிழியாத வாய்மையில் கவிதையாய்.... சிறுகதையாய்... கட்டுரையாய் எம்தமிழீழ வெற்றிக்கான பரப்புரை செயலில் தொடர்பறா உழைப்பை ஊற்றிக்கொண்டிருக்கும் எம் கணபதி கணேசன்! உங்கள் கவிதைகளால் உங்களுக்கு மட்டுமன்று... இனத்திற்கும் பெருமை எனும் பயன் பாட்டோடுதான் உங்களை பாராட்டுகின்றேன்.

கவிஞர் - 'அறிவுமதி'
முன்னுரை
'குருதி பூத்த வெள்ளரசு'

## எழுத்தாளர் கணபதி கணேசனின் மறைவு

மலேசியா, தமிழகம், தமிழீழம் இன்னும் பல நாடுகளில் நன்கு அறிமுகமான திருவாளர் கணபதி கணேசன் அவர்களின் மறைவு தமிழ் உலகுக்கு நிகழ்ந்த பேரிழப்பாகும்.

நவீன இலக்கியத்தில் அன்னவருக்கு இருந்த ஈடுபாடு மதிப்பிற்குரிய ஒன்றாகும். இலக்கியங்களின் தன்மை, ஈடுபடுத்திக்கொண்டு அதனைச் சரியான தராசில் நிறுத்துப்பார்ப்பதில் அன்னவர் தவறியது கிடையாது.

மலேசிய மண்ணில் செம்பருத்தியின் பொறுப்பாசிரியராக இருந்து, நவீன இலக்கியத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இவரின் இழப்பு, தமிழ் இலக்கியத்திற்கு பேரிழப்பாகும் என்பதில் இரண்டு விதக் கருத்துகள் இருக்கமுடியாது.

எங்களின் கவசங்களில் ஒன்று கழற்றப்பட்டுவிட்டது என்கிற கவலை எங்களுக்கு எப்போதுமிருக்கிறது.

அன்னாரினை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு, மலேசிய நவீன இலக்கியச் சிந்தனையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நவீன இலக்கியச் சிந்தனை
மலேசியா.

## கணபதி கணேசன்

இயற்கையின் முரண்களும், இறைவனின் லீலாவிநோதங்களும் ஒன்றிற்கொன்று சளைத்தவையல்ல என்பதனைக் கணபதி கணேசன் என்னும் கலைஞனின் மரணப் போராட்டத்தின்போது, எவ்விதக் கருணையுமின்றி அவனது மரணத்தை வெற்றிகொள்ளத் துடித்த மறு உயிர்ப்பினை, அடக்கி ஒடுக்கிய விதம் விமர்சனம் செய்கின்றது.

மானுடமும், தெய்வமும் போராடியதில் தெய்வம் வென்றதா? தோற்றதா? தென்னகத்தின் அக்கரையில் தனது சிறுநீரகத்தை உவந்தளிக்க அந்த இளம் தாயின் அன்பு அலறலின் முன் தெய்வீகம் எவ்விதம் ஒளிகுன்றியது?

1980களில் இன விடுதலையேல் கொண்ட தணியாத தாகத்தாலும், மரணத்துள் வாழ்ந்துழலும் வெம்மைசார் உணர்ச்சிக்கும், தமிழன்னைக்கு ஆறா விலங்கிட்டோர்க்கு பதிலடி கொடுக்கும் எண்ணத்தாலும் இன மீட்புப் பணியில் தன் கரமும் இணையவேண்டும் எனும் வேணவாவிலும் இயங்கிக் கொண்டிருந்த இளைஞன் அவன். இலக்கியக் கலைவடிவங்கள் -போர்க் கருவிகளாயின.

கவிதையும் கதைகளும் மக்கள் மனதிப் புரட்சிக் விதைகளாயின. பிரசுரங்கள் - பிரசுரங்களாக - அச்சியந்திரம், பத்திரிகைகள் - பிரசவமனைகளாகின. அவன் - இவற்றின் சொந்தக்காரனானான். அவன் சுழன்று சுழன்று சூறாவளியென, எல்லா திசைகளிலும், எல்லாத் திசைகளிலும் உழைத்தான்.

'முகம்' - என அவன் பத்திரிகை ஈழத்தமிழ் வானில் உலாக் கொண்டது.

இலக்கிய வட்டம் - செயலாளனாக்கி ஏற்றுக்கொண்டது.

யாழ்.இந்துவின் மைந்தன்பெற்ற மெய்யியல் பட்டத்தின் பயனாய், எதையும் தர்க்க ரீதியில் சிந்தித்து செவ்வை பார்க்கும் திறனாய்வாளனானான். பத்து மாதம் சுமந்த தாய், காதல் மனைவி, பச்சிளம் குழந்தை கருவிலே மகள் என உறவுகளைப்பிரிந்து தாய் மண்ணை விட்டு விலகினான்.

அக்கினிக்குஞ்சு அலைகடல் தாண்டிப் பறந்தது அதன் ஜுவாலையை இந்து சமுத்திரத்தின் குளிரலைகளால்கூட அணைக்கமுடியவில்லை.

அவன் சென்ற இடமெல்லாம் அவன் உழைப்பு ஆங்காங்கே உரமாயின. எந்நாட்டவரும் போற்றி ஏற்றனர். பெண்ணியம் பற்றிய சிந்தனையும் கவிதை மொழியில் கலந்தன. வீரம், தாய்மண் நேசிப்பு, தமிழ் மொழிக்காதல் அவனை முழு மனிதனாக்கியது. கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், ஆய்வுக்கட்டுரைகள், நேர்காணல்கள் என பிறந்து அச்சில் பேசின. எதனை அவாவி நாட்டைத்துறந்து அலைகடல் கடந்து இருபதாண்டு காலம் அந்நிய தேசங்களில் அஞ்ஞாதவாசம் செய்தானோ, வானம் வசப்படுவது போல, கனவு கைகூடநிற்கும் வேளையில் மரணம் அவனைத் தழுவியதனில், இயற்கையில் முரண்களும், இறைவனின் லீலா விநோதங்களும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்பதையே அவன் மரணம் காட்டிநிற்கிறது.

அவன் ஆத்மா சாந்தியடைவதாக.

'செம்பியன் செல்வன்'

(9ஆம் பக்கம் பார்க்க)

## எமது பிள்ளைகள் மற்றும் உறவுகள் குறித்து

# இறுதி முடிவு தெளிவாகும்வரை எவரும் இறப்பினை அத்தாட்சிப்படுத்தமுடியாது!

### காணாமற்போனோர் சங்கம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.13

கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமற்போன எமது பிள்ளைகள் மற்றும் உறவுகள் தொடர்பான உண்மையான இறுதியான முடிவை எமக்குத் தெளிவுபடுத்தும்வரை எந்தவோர் அரச உயர் அதிகாரியாக இருந்தாலும் எமது உறவுகளுக்கான இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கமுடியாது. எந்த ஓர் உதவிகளையும் நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் சங்கத்தினர் இவ்வாறு தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இச்சங்கத்தினர் பேரணி நடத்தி அரசசார்பற்ற நிறுவனங்களிடம் மகஜர் கையளித்தனர். இதன் முடிவில் சங்கப் பிரதிநிதிகள் ஒருமித்து இவ்வாறு கூறினர். அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

தாம் அரசின் பிரதிநிதிகள் அல்ல. ஆகவே எமக்கும் இப்பிரச்சினைக்கும எந்தவித தொடர்பும் இல்லையெனக் கூறி சிலர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப்பார்க்கின்றனர்.

நாளை 14ஆம் திகதிக்குள் எமக்கு ஒரு சாதகமான முடிவைத் தரும்படி யாழ்.அரச அதிபருக்கு அவகாசம் வழங்கியுள்ளோம். இதற்குள் எமக்கு ஒரு முடிவு கிடைக்காவிடில் நாம் தொடர்ந்தும் தகுந்த இடங்களில் மறியற்போராட்டங்களை மேற்கொள்வோம்.

அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவிருக்கும் அரசு - புலிகள் பேச்சின்போது எமது பிரச்சினை குறித்து - காணாமற்போனவர்கள் எங்குள்ளனர் என்பது தொடர்பாகப் பேசப்பட வேண்டும். இதற்காக பேச்சில் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடமும், அரச பிரதிநிதிகளிடமும் மகஜர்களைக் கையளிக்க தீர்மானித்துள்ளோம்.

தற்போது மகஜரை ஏற்றுக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் விரைவில் பதில் தருவதாகக் கூறியுள்ளன. ஆனால், மகஜரில் அடங்கிய விவரங்கள் போதியதாக இல்லையென்றும் காணாமற்போனோர் ஒவ்வொருவர் தொடர்பாகவும் விவரமான தரவுகளையும் பொலீஸ் அதிகாரிகளினது அறிக்கையையும் பெற்றுச் சமர்ப்பிக்குமாறும் அந்த நிறுவனங்கள் கேட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தனி நபர் பிரேரணை ஒன்றையாவது கொண்டுவருவதற்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை தவறிவிட்டனர்.

ஒன்று அல்லது இரண்டு தடவைகளாவது இந்த விடயத்திற்காக இவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்து ஏன் வெளிநடப்புச் செய்யக்கூடாது?

முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு உள்ள உணர்வுகூட எம்மவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ)

# கட்டுநிதியால் பெற்ற பணம் உள்ளூராட்சி சபைகளுக்கு

நிதியமைச்சின் கட்டுநிதியில் இருந்து அண்மையில் கிடைக்கப் பெற்ற 4லட்சத்து 5ஆயிரம் ரூபா பணமானது யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு யாழ்.நீதிமன்றினால் வழங்கப்படவுள்ளது.

நீதிமன்றில் நடைபெற்ற வழக்குகளின் போது குற்றவாளிகளிடம் இருந்து தண்டமாக அறவிடப்பட்ட பணமே அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு அமைய இவ்வாறு வழங்கப்படவுள்ளது.

வழங்கப்படவுள்ள செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கான பணமானது உள்ளூராட்சி சபை ரீதியாக வருமாறு:-

வலி.மேற்கு பிரதேச சபை - 390ரூபா,

வலி.வடக்கு பிரதேச சபை- 450ரூபா,

வலி.தெற்கு பிரதேச சபை - 6ஆயிரத்து 250. ரூபா,

நல்லூர் பிரதேச சபை - 55ஆயிரத்து 475ரூபா,

வலி.தென்மேற்கு பிரதேச சபை- 18 ஆயிரத்து 450ரூபா,

வலி.கிழக்கு பிரதேச சபை ஒரு லட்சத்து 2ஆயிரத்து 100ரூபா,

யாழ்மாநகரசபை 2லட்சத்து 21ஆயிரத்து 950ரூபா.

இந்த ஆண்டில் நிதி அமைச்சின் கட்டு நிதியில் இருந்து இதுவரை பெறப்பட்ட 17லட்சத்து 56ஆயிரத்து 230ரூபாவானது உள்ளூராட்சி சபைகளுக்கும் பிணைப்பணம் செலுத்தியோருக்கும் வழங்கப்பட்டதாக யாழ். நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஏ-10)

# தோப்புக்காட்டுப் பகுதியில் தொற்று நோய் அபாயம்!

வலி.மேற்கு,டிசெ.13

தோப்புக்காடு, காரைநகரில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கண்நோய், நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

தோப்புக்காட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் உட்பட அடிப்படை வசதிகள் எதுவும் போதியளவில் செய்துகொடுக்கப்படவில்லை. பெரும் எண்ணிக்கையானவர்கள் சிறிய இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆதலால் இப் பகுதியில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தொற்றுநோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

தோப்புக்காட்டில் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் 130 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வேரவில் குடியிருப்பில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ளனர்.

மின்சார வசதி, இருப்பிட வசதி, மலசலகூட வசதி போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இக்கிராம மக்களுக்கு இன்றுவரை போதியளவு கிடைக்கவில்லை. தற்போது பெய்து வரும் மழையினால் மலசலகூடம் இன்றி அல்லற்படும் இவர்கள் தொற்று நோய்கள் அதிகரிக்குமென பீதியடைந்துள்ளனர்.

(ஏ-175)

## குளவி கொட்டி மூவர் காயம்!

காற்றில் அடிபட்டு வீழ்ந்து சிதறிய குளவிக் கூட்டில் இருந்து புறப்பட்ட குளவிகள் ஒன்றுசேர்ந்து கொட்டியதில் இரு பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

மந்துவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தனியார் கல்வி நிறுவனத்துக்கு சென்றுவிட்டு வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த மாணவர்களான குமரகுலசிங்கம் சுதர்சன் (வயது 13), எஸ்.லதீபன் (வயது 13) மற்றும் பத்மநாதன் கீதா (வயது 26) ஆகியோரே இவ்வாறு குளவித் தாக் ததலுக்கு இலக்காகினர்.

இவர்களில் சுதர்சன் தலை, முகம் ஆகியபகுதிகள் வீக்கமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றைய இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

(எ-15)

## காணாமற்போனோர் சங்க கலந்துரையாடல்

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிறு காலை 10.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத்தின் செயலாளர் எஸ்.சற்குணம் கேட்டுள்ளார்.

இதேவேளை - காணாமற்போனோர் தொடர்பான விவரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்துக்கும் உடனடியாக வழங்க வேண்டியுள்ளதால் நாளைவரை காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு உறுப்பினர்களை வருகை தருமாறும் செயலாளர் கேட்டுள்ளார்.

(ஓ-10)

## கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனக் குருமார் குடும்பங்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் நிகழ்வு இம்மாதம் 17ஆம் திகதி வரணி திருச்சபையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி எஸ்.ஜெயநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நாடுபூராவிலும் பணியாற்றும் குருமார் குடும்பங்கள் கலந்துகொள்வார்கள்.

(ஓ-152)

# 'செம்பருத்தி' இதழ் உதிர்ந்த....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கிணற்றடிச் செம்பருத்தி...

★ கடலைத் தாண்டின
கணபதி கணேசன்
உடலும் உயிரும்
★ தாயகத்திலேயே தரித்தன அவர்
தமிழ் நெஞ்சும் உணர்வும்
அவரை நான் அறிவேன்
★ தமிழீழ மண்ணில் ஆழ வேரூன்றிய
எங்களூர்க் கிணற்றடிச் செம்பருத்தியாய்
அவர் தமிழ்
சிவப்பு எழுத்துக்கள்
★ போர்க்களத்தில் சீற்றமும் பொருமலும்
பொங்கி அலையெறியும் தமிழ்க்கோலம்
பெருமூச்சுக்களின் வெடிப்பு
★ கணபதி கணேசனின் எழுதுகோல்
கால் ஒடிந்து நடை தளர்ந்த
தமிழினம் கைப்பற்றி நிமிரும் ஊன்றுகோல்
★ இலக்கியத் திறனாய்வாளர்
சொல்வது போல் காலத்தின் கண்ணாடி தான்
இலக்கியம் என்பதால் - ஈழத்தின் கண்ணாடியாகவும்
அவர் படைப்புக்கள்
மண்ணின் முகங்களோடு
தமிழின் மார்வு."

கவிஞர் காசி ஆனந்தன்
'அணிந்துரை' குருதி பூக்கும் வெள்ளரசு



## நண்பரோடு சில காலங்கள்...

முன்னேறத் துடிக்கும் சமுதாயத்தின் எழுச்சிக் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் 'செம்பருத்தி' மாத இதழின்மூலம் அறிமுகமானவர் நண்பர் கணபதி கணேசன் அவர்கள்.

நாட்டை விட்டு இலட்சிய வேட்கையோடு வெளியேறிய கணபதி, தமிழீழம், தமிழர் போராட்டம், தமிழர் உரிமைகள் ஊற்ற அடிப்படையிலேயே தனது செயல்கள், பேச்சுக்கள், எழுத்துக்கள் யாவற்றையும் வகுத்துக் கொண்டவர்.

மலேசியத் தமிழர்களுக்கான பொதுப் பிரச்சினைகளில் மூழ்கி, தமிழ் கல்வி, தமிழ்ப் பள்ளி, தமிழர் பொருளாதாரம், தமிழ் கலாசார சீரழிவுகள் போன்றவற்றிற்குத் தன் எழுத்துக்களால் குரல் கொடுத்தவர்.

கவிதைத் துறையில் அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. திரு.காசி ஆனந்தனைப்போல் அவரது எழுத்துக்களில் வேகம் இருக்கும், கருத்துக்கள் தெறிக்கும், உணர்வுகள் கொந்தளிக்கும்.

மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் நடத்தப்பட்ட கவிதை ஆய்வரங்கில் 60விற்கு மேற்பட்ட கவிதைகளை ஆய்வு செய்து அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இன்றுவரை மலேசிய இலக்கியத்தில் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது அவர் இலக்கியப் பணிக்கு தக்கசான்றாகும்.

2002 ஆடி மாதத்தில் தனது இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டிருக்கும் செய்தியை வைத்தியர் வாயிலாக அறிந்தபோதும் எவ்வித சலனமுமின்றி வழமையான அமைதியுடன் ஏற்றுக் கொண்ட கர்மவீரனை. இறுதிவரை தன் பணிகளை செவ்வனே ஆற்றி முடித்த செயற்திறனை நான் பலமுறை வியந்திருக்கிறேன்..

இறுதியாக இந்தியா பயணமாகும்போது 'போய் வருவேன்' என்று விடைபெற்றார். வராமலேயே சென்று விட்டார். அவரை இழந்து கலங்கும் அன்னார் குடும்பத்துடன் என் குடும்பமும் சேர்ந்து கலங்குகின்றது.

*அவர் ஆத்மா சாந்தியடைவதாக!*

எம்.கே.கலைமணி
மலேசியா

## உற்ற நண்பனுக்கு

*அன்று,*
*மஞ்சள் மாலை*
*மகரந்தங்களோடு தோய்ந்து கிடந்தது.*
*எதிரெதிரில் நாம்.*
*நமக்கு தெரிந்திருந்தது*
*உயிர் கரைவதன் மர்மம் பற்றி.*
*பாசங்களையும்,*
*மர்மம் பற்றிய தேடல்களையும்.*
*மகத்தான,*
*மானுட உரிமைகளின் மீதான*
*சிந்தனைகளுக்கடியில்*
*மறைத்து வைத்து விட்டாய்*
*எதார்த்த அவலங்களுக்கெதிரான*
*எழுத்தைக் கூர்மைப்படுத்துவதன் முனைப்பில்*
*உனக்கு மட்டுமேயான சுயநலத்தை*
*ஒதுக்கி வைத்து விட்டாய்*
*வெறிகொண்ட இனவாதம்*
*சிதறடித்து வைத்தது உறவுகளை*
*ஓடி வந்த இடத்திலும் உன்னினம்*
*ஒடுக்கப்படுவது கண்டு பதைத்தாய்.*
*மாவீரர் துயில்வதன் பேரமைதியில்*
*நீ மௌனித்துக் கிடந்தாய்!*
*உன்னுடைய தனிமைகளுக்குள்*
*நான் பிரவேசித்து விடுகிறபோது - நீ*
*உன் தாய் மண்ணிலிருந்து*
*அழுந்து வந்திருக்கிறாய் பல முறை.*
*எழுத்துக்களால் சிறைமடைந்து கிடக்கும்*
*உன் சிந்தனைகளை தரிசிக்கிறபோது*
*நீ உயிர் கொண்டு புரள்கிறாய்*
*உன்னின உரிமைகளுக்காய்*
*மாற்றென்னை கொண்டவரையும் - நீ*
*மனித நேயத்துடன் அணுகுவாய்.*
*மறுப்பிலும் நாகரிகம் காட்டுவாய்.*
*செம்பருத்தித் தோட்டத்திலிருந்து*
*உதிர்ந்து விட்டாயெனினும்.*
*இன்னும் பல செடிகளின் விதையாகிப் போனாய்*
*வெறும் மனிதன்*
*வெறுமனே செத்தால் வெறும் கூடுதான்*
*நீ கவிஞன்*
*மகரந்தங்களாலான கூடு*
*காத்திருக்கிறேன் நண்பா*
*நீ வருவாயா காற்றோடு.....?*

ஜெ.கரிகாலன்
மலேசியா.

(C-25371)

# 31ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 23 - 06 - 1918

உதிர்வு 13 - 11 - 2002



திருமதி

## கணபதிப்பிள்ளை பாக்கியம்

(மட்டுவில் தெற்கு)

*அன்பு நீர் ஊற்றி அறியாமை நீக்கி*
*அருள்கொண்டுழைத்த அம்மா!*
*மறைந்த உங்கள் உருவம் ஊசலாட*
*சிறையாக்கி வைத்தே அழுகின்றோம்.*

*சாவகச்சேரி.* (11669) **- மகன் குடும்பத்தினர்.**

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்



## திருமதி கோகிலாதேவி ரங்கநாதன்

மலர்வு 29-04-1963

உதிர்வு 17-12-2001

*கண்ணின் மணிபோல் அன்புடன் காத்த எம் தாயே!*
*அநாதைகளாய் எம்மை விட்டுச் சென்றீரே அம்மா!*
*ஓராண்டு ஓடி மறைந்திடினும் ஈரவிழிகள் காயவில்லை அன்னையே!*
*ஆழமான உள்ளத்தில் பதிந்து விட்ட ஆசைமுகம்*
*அழியாது எம் உயிர் உள்ள வரையில் - நீங்கள்*
*ஆண்டவன் பாதம் அமர்ந்திருக்க*
*அன்றாடம் வேண்டுகின்றோம் இறைவனை அம்மா.*

*இல.25, ராதிகா இல்லம்,*
*சிவன் கோயில் வீதி,*
*சாவகச்சேரி.*

**- குடும்பத்தினர்.** (11635)

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை இராமநாதன்

மாதகலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இராமநாதன் (இளைப்பாறிய தபால் அதிபர்) 10.12.2002 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சீதாலக்சுமியின் அன்புக் கணவரும் மகேஸ்வரன் (கனடா), சோதீஸ்வரன் (கனடா), செல்வராணி (கனடா), தபேஸ்வரன் (கனடா), சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சநிதி (கொழும்பு), பரமதேவி (கனடா), பிறான்சிஸ் சேவியர் (கனடா), தேவி (கனடா), சுந்தரி (கனடா) ஆகியோரின் மாமனாரும் விதுசன், தர்சனன், ரிஷாந், சாலினி, சோபினி, பிரியா, சுகன்ஜா, ரிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.12.2002) வியாழக்கிழமை மார்க்கம் ஒன்ராறியோவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.41 1/2, 42ஆம் வீதி,*
*வெள்ளவத்தை, கொழும்பு - 06.* (11676) திருமதி மகேஸ்வரன்.

# முறைசாராக்கல்வி இறுதிப் பரீட்சை

யாழ். கல்வி வலய முறைசாராப் பிரிவு நடத்தும் இறுதிப் பரீட்சை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றுபவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-51)

# லாலாவின்

**இலவச**

**விளம்பர பத்திரிகைச் சேவை**

நமது ஈழ மண்ணில் எவரும் இதுவரை மேற்கொள்ளாத - முதன்முதலில் வெளிவரும் - பத்திரிகை இது மட்டுமே.

உரிமையாளர்

**லாலா சோப்,**
**அச்சுவேலி.** (சி-25358)

# ஆங்கில வகுப்புகள்

தரம் 1முதல் தரம் 13 வரையான பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாடத்திட்டத்திற்கு அமையவும் வளர்ந்தோருக்கும் ஆங்கில பேச்சுப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

ஆசிரியர்: **M.P.ஷண்,**
**சுஷாந்தீஸ்**
**ஆங்கில கல்வி நிலையம்,**
டச்சு வீதி, சாவகச்சேரி. (சி-25335)

# நகரசபை, சாவகச்சேரி

## 2003ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

**சாவகச்சேரி நகரசபையின் (255ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

1. கட்டளைச் சட்டத்தின் 160(3)ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10%மான வரியொன்றினை 2003ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூலை 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாயத் தவணைகள் மூலம் செலுத்தப்படல்வேண்டும்.
2. 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.
3. மேற்சொல்லப்பட்ட பந்தி 1இன் படி சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வதிவிடங்கள்மீது 15%மும் மற்றும் ஏனைய இடங்கள்மீது 20%மும் விறாந்துக் கட்டணம் அறவிடப்படும்.
4. ஆதனவரி சார்பாக இடிந்த கட்டடங்களுக்குரிய ஆட்சேபனைகள் யாவும் 31.01.2003ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
*12.12.2002*

பெனடிக்ற் தனபாலசிங்கம்
*தலைவர்,*
*நகரசபை, சாவகச்சேரி.*

(சி-25365)

**எமது ஈழமண்ணின் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பல நோ.கூ.சங்கங்களின்**

தலைவர் முதல் முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கிளை முகாமையாளர், உதவியாளர் கொள்முதல் பொறுப்பாளர், உதவியாளர் ஆகியவர்கள் முகங்கோணாமல், தட்டிக் கழிக்காமல், சாக்குப் போக்குச் சொல்லாமல் அன்பு கலந்த இதய சுத்தியோடு முழுமனதுடன் தரும் ஆதரவுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.

**லாலா சோப்** எமது தயாரிப்பான **சன்சயின் சோப்** உற்பத்திக்கு இவர்கள் காட்டும் கரிசனையும் ஆதரவும் ஊக்கமும் எமக்கு என்றென்றும் தேவை. தொடர்ந்து எமக்கு ஆதரவளித்தால்தான் கைத்தொழில் வளத்தைப் பெருக்கி பலருக்கு நாம் வேலை வாய்ப்புக்களை வழங்கமுடியும். அதன்மூலமே எமது உற்பத்திகளும் ஈழமண்ணில்

*நல்ல வளம் பெறும்*

என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஈழ வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களுக்கும் எமது இதய நன்றிகள்.

**லாலா சோப் தொழிற்சாலை**
**அச்சுவேலி.** (சி-25359)

உ
சிவமயம்

# நீங்கா நினைவில் ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 30-10-1935

மறைவு 24-12-2001

அமரர்

## சின்னத்துரை நவரத்தினம்

திதி: 13.12.2002 (நவமி)

எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கும்
எம் இனிய அப்பாவே! - நீங்கள்
இவ்வுலகை விட்டோராண்டு ஆனாலும்
மாறிடுமோ எம் துயரம், மறைந்திடுமோ
உங்கள் முகம்.
கண்ணின் கருமணி போல்
எமை வளர்த்த தெய்வமே!
இன்றுங்கள் அன்பும் அரவணைப்பும்
எங்குதான் போனதப்பா?
வழிந்தோடும் விழிநீரில்
எங்கள் விழிதேடும் உங்கள் முகம்
விழிதேடும் இடமெல்லாம்
விம்பமாய் தோன்றுதப்பா!
உயிருள்ள வரை என்றும்
உங்கள் நினைவிருக்கும்
அந்த இனிய நினைவதில்
உங்கள் அன்பு முகம் என்றும் நிலைத்திருக்கும்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*61, பிரம்படி ஒழுங்கை,*
*தலையாழி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (11620)

ஈர விழிகளுடன்:
மனைவி: நடராஜேஸ்வரி,
மகன்: ந.நடராஜகுமரன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மாநகராட்சி மன்றம்

## பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழு அமைக்கும் விடயத்தில்

# வடக்கு - கிழக்குக்கு ஒரு வலயமா? எதிர்க்கட்சிகள் சபையில் சீற்றம்!

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இணைந்த ஒரே பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைக்கலாமா என்ற சர்ச்சை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தை ஒரே கலக்குக்கலக்கியது.

வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனி இரண்டு பொருளாதார ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் வற்புறுத்தின.

ஆனால், அரசுத் தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து இந்தக் கோரிக்கையை சபையில் தோல்வியடையச் செய்தன.

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனிநிர்வாக அலகு தேவை என வற்புறுத்திவரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள்கூட, வடக்கு - கிழக்குக்கு இணைந்த ஒரு பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பதையே ஆதரித்தனர் என்பது நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளில் முக்கிய அம்சமாகும்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றம் கூடியபோது முதலீட்டுச்சபை சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதா, இல்லையா? என்ற விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. சபை இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. 75 நிமிட நேரம் காரசாரமான விவாதம் நடைபெற்ற பின்னர், விவாதத்தை நடத்தலாம் என்று சபாநாயகர் தீர்ப்பு வழங்கினார்.

அதையடுத்து, விவாதத்தினை ஆரம்பித்தார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

ஐந்து பொருளாதார வலயங்களை நாட்டில் அமைத்துச் செயற்படுத்தப்போவதாகக் குறிப்பிட்ட அவர், வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு தனியானதொரு வலயம் அமைக்கப்படும் என்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குத் தனியானதொரு வலயம் அமைக்கப்படுவதை ஜே.வி.பியினர் கடுமையாக எதிர்த்தனர். இது விடுதலைப் புலிகளின் பிரிவினைக்கு ஊட்டச்சத்தாக அமைந்துவிடும் என்றார் ஜே.வி.பியின் எம்.பியான விஜித ஹேரத்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் முதலீட்டுச் சபை சட்டமூலம்மீது அரை மணி நேரம் உரையாற்றினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு - கிழக்குப் பகுதியினைப் பிரிப்பதை ஒரு தீர்வாகக் கருதவில்லை. அங்கு வாழும் சமூகங்களுக்கிடையில் அதிகாரங்கள் முறையாகப் பகிரப்படவேண்டுமென்றே எதிர்பார்க்கிறது என்றார் அவர்.

"எங்களது கொள்கை தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இடையூறாக இருப்பதல்ல. எமது மக்களின் உரிமைகள் உரியமுறையில் வழங்கப்படவேண்டும் என்பதேயாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"நீங்கள் வடக்கு - கிழக்குப் பகுதி, தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?" - என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன அமைச்சரின் உரையினை இடைமறித்துக் கேட்டார்.

"அந்தப் பிரச்சினை இங்கு எழவில்லை. சமஷ்டி முறையினை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். முஸ்லிம்களின் பிரச்சினைகளும் அதனூடாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்" - என அமைச்சர் ஹக்கீம் பதிலளித்தார்.

"அவ்வாறானால், கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் நிலையென்ன?"- என தினேஷ் குணவர்த்தன மீண்டும் அமைச்சர் ஹக்கீமிடம் கேள்வி எழுப்பினார்.

"அதனைப் பிரபாகரனிடம் கேளுங்கள்" - என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளித்தார்.

ஒரு காலகட்டத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்ற சொற்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்தினர். ஆனால், தற்பொழுது அதிலிருந்து நகர்ந்து, தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் தாயகம் அது என்று அவர்கள் குறிப்பிடத் தொடங்கியுள்ளனர் என்றார் ஹக்கீம்.

எவரும் யதார்த்தத்தை உணரத் தவறினால், அது நடைமுறைச் சாத்தியப்படாமற் போய்விடும் என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

முதலீட்டுச்சபை சட்டமூலத்திற்கு எதிர்க்கட்சியினால் திருத்தம் கொண்டுவரப்பட்டது. 'வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு இரண்டு பொருளாதார ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு இருபகுதிகளிலும் அவை வெவ்வேறாக நிர்வகிக்கப்படவேண்டும்' என்றார் தினேஷ் குணவர்த்தன.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த பகுதியல்ல. அதனை ஜே.ஆர்.ஜயவர்த்தனா தமது அரசியல் இலாபத்திற்காகத் தற்காலிகமாக இணைத்தார். இது தற்போது நிரந்தரமாக நீடித்துவிட்டது. ஆகவே, கிழக்குக்கும் தனியானதொரு பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவை நியமியுங்கள் - என்று கோரினார் அவர்.

அதனை ஆதரித்தார் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. வடக்கில் தமிழர்கள் வாழ்கிறார்கள். கிழக்கில் முஸ்லிம்களும் சிங்களமக்களும் செறிந்து வாழ்கின்றனர். இங்கு இரண்டு பொருளாதார ஆணைக்குழுக்கள் அவசியமாகும் என வலியுறுத்தினார் அவர். அதனை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத்தும் வரவேற்றார்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தத் திருத்தத்திற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

பொருளாதார ஆணைக்குழு விடயத்தில் அநுராதபுரம், பொலனறுவை போன்ற மாவட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் வடக்கும் கிழக்கும் ஒன்றாகவே இணைக்கப்பட்டுள்ளன என்றார் அமைச்சர் பீரிஸ்.

அதனை எதிர்க்கட்சியினர் ஏற்கவில்லை. பொது மக்கள் ஐக்கிய முன்னணியினரும் ஜே.வி.பியின் எம்.பிக்கள் பலரும் வடக்கில் ஒரு பொருளாதார ஆணைக்குழுவும் கிழக்கில் இன்னுமொரு பொருளாதார ஆணைக்குழுவும் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் விடாப்பிடியாக இருந்தனர்.

வடக்கு - கிழக்குப் பகுதி பல வருடங்களாக ஒன்றிணைந்தே உள்ளது. எதுவித காரணங்கொண்டும் அப்பகுதி பிரிக்கப்படக்கூடாது. ஒரு பொருளாதார ஆணைக்குழுவின் நிர்வாகத்திலேயே அது செயற்படவேண்டும் என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பியான வீ.ஆனந்தசங்கரி வலியுறுத்தினார். கூட்டாகத் தாம் முன்வைத்த வடக்கு - கிழக்குப் பகுதிக்கு இரண்டு ஆணைக்குழுக்கள் அமைக்க வேண்டுமென்ற தமது திருத்தத்தை வாக்கெடுப்பிற்கு விடுமாறு எதிர்க்கட்சியினர் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டனர்.

திருத்தம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது திருத்தத்திற்கு ஆதரவாக 61 வாக்குகளும், எதிராக 110 வாக்குகளும் அளிக்கப்பட்டன. எதிர்க்கட்சியினர் முன்வைத்த திருத்தம் தோல்வியடைந்தது. அரசதரப்பிலிருந்தும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது.

கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனி அலகொன்று வேண்டுமெனக் குரல் எழுப்பிவரும் அமைச்சர் அதாவுல்லாவும், அவரது சகாக்களும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர்களான எம்.பிக்களும் வடக்கு - கிழக்குப் பகுதிக்கு ஒரு பொருளாதார ஆணைக்குழுவே அமைக்கப்படவேண்டும் என்பதை ஆதரித்தே வாக்களித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வாக்கெடுப்பிற்குப் பின்னரே அவசரமாகச் சபைக்குள் வந்தார். அவரால் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளமுடியவில்லை. முதலீட்டுச் சபை சட்டமூலத்தை சபை ஏற்றுக்கொண்டது.

பிற்பகல் 2.45 மணியளவில் பணச் சட்டதிருத்தச் சட்டமூலம், சுங்கத் திருத்தச் சட்டமூலம் ஆகியன விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

விவாதத்தினைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியான மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆரம்பித்தார்.

இலங்கையின் அந்நிய செலாவணியை மத்திய வங்கியே கட்டுப்படுத்துகிறது. ஆயினும், நாட்டில் வெளிநாட்டுப் பணத்தை மாற்றிக் கொடுக்கும் பல நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவை சட்டபூர்வமான அனுமதி பெற்றவையல்ல. இவற்றின் செயற்பாடு தடுக்கப்படவேண்டும் என்றார் அவர்.

இந்நிலையில் குறுக்கிட்ட அமைச்சர் அஸ்வர், இவை அரசில் பதிவு செய்யப்பட்ட பணம் மாற்றும் நிறுவனங்களாகும். சட்டத்திற்கு முரணாக இவை நடத்தப்படவில்லை என்றார்.

கிராமியப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன பேசுகையில், அரசு பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டே இந்த இரண்டு திருத்தச் சட்டமூலங்களையும் முன்வைத்துள்ளது. பொருளாதார ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதும் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டேயாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் இதனால் நன்மையடைவர் என்றார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியான மஹிந்தானந்த அளுத்கமகே உரையாற்றும்போது, பிரதி நிதி அமைச்சரின் உரையில் உண்மை எதுவுமில்லை என்றார். 'ரியூசன் கிளாஸ்' நடத்துவதைப் போன்றே அவர் இங்கு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பற்றி விளக்க முனைந்தார். அவரது உரையினை நம்புவதற்கு நாம் அவரிடம் கணக்கியல் கற்கும் மாணவர்கள் அல்லர் எனச் சாடினார்.

"நான் மாணவர்களுக்கு கணக்கியல் கற்பிப்பதை அமைச்சரானதும் நிறுத்திக்கொண்டேன். தற்போது உங்களைப் போன்றவர்களுக்கு அரசியல் பாடத்தைப் புகட்ட வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது" - எனப் பதிலளித்தார் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

"இவ்வருடத்தின் இறுதி நாடாளுமன்றக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. விவாதத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி. நாடாளுமன்றத்தில் பணிபுரிபவர்கள், செய்திகளைத் திரட்டித்தரும் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்" என அமைச்சர் அஸ்வர் நன்றி கூறி அமர்ந்தார்.




ஜே.வி.பியின் எம்.பியான சுனில் ஹந்துன் நெத்தி விடுதலைப் புலிகளைச் சாடினார்.

இங்கு மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள் பற்றியெல்லாம் பேசிய நிதியமைச்சரும் அரச தரப்புப் பேச்சாளர்களும் ஏன் விடுதலைப் புலிகளின் வங்கிகள் பற்றிப் பேசவில்லை? நிதி அமைச்சர் அவ்வாறு வங்கிகள் இயங்குவது தமக்குத் தெரியாது என்கிறார். சபையினைப் பிழையாக வழிநடத்தும் விவாதம் இதுவென பொரிந்துதள்ளினார் ஹந்துன் நெத்தி.

இலங்கையில் 23 தனியார் வங்கிகள் உள்ளன. அவற்றை இலங்கை மத்திய வங்கி முறையாக வழிநடத்துவதில்லை. இதனால், எமது பொருளாதாரம், அந்நிய செலாவணிக்கும் ஆபத்து ஏற்படுகிறது என்றார் தினேஷ் குணவர்த்தன.

எதிர்க்கட்சியின் சார்பில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி எம்பியான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே விவாதத்தை நிறைவு செய்து உரையாற்றினார்.

பிரமுக வங்கியை மூடிவிடும்படி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். இதில் முதலீடு செய்யும்படி முன்னர் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்யப்பட்டன. அப்பொழுது மத்திய வங்கி மௌனமாக இருந்தது.

15 ஆயிரத்திற்கும் அதிகமான இதன் வாடிக்கையாளர்கள் இப்போது பாதிக்கப்பட்டுள்ளனர். பிரமுக வங்கியில் முதலீடு செய்த பணத்தினை மீளளிப்பதற்கு யார் பொறுப்பேற்பது? பிரமுக வங்கியின் நடவடிக்கைகளை

(12ஆம் பக்கம் பார்க்க)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2263825 இருந்து 2280647 வரை

சீட்டிழுப்பு இல. 1357

திகதி 11.12.2002



வெற்றி எண்கள்: 03 04 12 40 51

போனஸ் எண்: 25

ஜக்பொட் பரிசு

ரூபா.2,326,800/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,326,800/- | 2,326,800/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 112 | 10,000/- | 1,120,000/- |
| 3 | 5,308 | 500/- | 2,654,000/- |
| 2 | 88,751 | 20/- | 1,775,020/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 108,448 | 10/- | 1,084,480/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,160,300/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 1,500,000/-

தொடர் இல. 3257282க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 14ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2267938-7-74
2266072-3-47
2272495-5-40
2267327-5-88
2270035-9-46

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

56... தொடரிலக்கமுடைய LITE ACE 2C TOYATA எஞ்சின் பொருத்தப்பட்ட AC வசதியுள்ள வான் மற்றும் 94 ஸ்ரீ பைக் கொண்ட CD 125 TWINமோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நல்ல சமாரியன் காரியாலயம், கோண்டாவில் கிழக்கு. T.P.No.: 021-222 2488, 021-222 3820 (11660)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள் 35/=, அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைசந்தையடி, நல்லூர். (11647)

### கடை வாடகைக்கு

யாழ்வீதி, மானிப்பாயிலுள்ள கடை ஒன்று வாடகைக்கு உள்ளது. பான்சி, பார்மஸி, பலசரக்கு கடை தவிர்ந்த ஏனைய கடைகளுக்குக் கொடுக்கப்படும். தொடர்புக்கு: பிள்ளையார் களஞ்சியம், மானிப்பாய். (11656)

### மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971ஆம் ஆண்டு பிறந்த, லக்கினத்தில் செவ்வாயுள்ள, லண்டனில் சுப்பர்மார்க்கட் உரிமையாளர் மணமகனுக்கு படித்த, அழகிய, உயரமான நற்பண்புள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். தொடர்பு: V.குமார், 49, எப்ராஸ்லி வீதி, யாழ்ப்பாணம். (11646)


## வடக்கு - கிழக்கு...

(11ஆம் பக்க தொடர்ச்சி)

பரிந்துரை செய்த மத்திய வங்கியின் ஆளுநரே இதனைப் பொறுப்பேற்கவேண்டும் என்றார் தினேஷ் குணவர்த்தன.

நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி அதற்குப் பதிலளித்தார்.

அரச வங்கிகள், வர்த்தக வங்கிகள், நிதி நிலையங்கள் போன்றவை குறித்து மக்கள் அறிந்திருக்கவேண்டும். அதனை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் அறிவுறுத்தியே வந்திருக்கிறது.

அனுமதிபெற்ற வங்கிகளும் கிளைகளும் வட மாகாணத்தில் இயங்குகின்றன. அரச வங்கிகள் அங்கு சட்டப்படி இயங்கும்போது, பொதுமக்கள் எதற்காகச் சட்டபூர்வமற்ற வங்கிகளுக்குச் செல்கிறார்கள் என்பது தெளிவில்லாமல் உள்ளதென தமது உரையில் அவர் கூறினார்.

பணச்சட்டத் திருத்தச் சட்டமூலம், சுங்கத் திருத்தச் சட்டமூலம் இரண்டையும் வாக்கெடுப்பின்றியே சபை ஏற்றுக்கொண்டது.

இதுவே இவ்வருடத்தின் கடைசி அமர்வாகும் எனக்கூறி அனைவருக்கும் சபாநாயகர் நத்தார் வாழ்த்துக்கள் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

புத்தாண்டில் ஜனவரி மாதம் ஏழாம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும்.

# நெல்லியடி மக்கள் மீதான தாக்குதல் மன்னிக்கமுடியாத பெரும் குற்றம்!

## புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

நெல்லியடியில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை மன்னிக்கமுடியாத குற்றமாகவே நாம் கருதுகின்றோம். ஜனநாயக ரீதியான போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அனைத்துத் தரப்பினரும் தண்டிக்கப்பட வேண்டும்.

- இப்படித் தெரிவித்துள்ளது விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை.

நெல்லியடி சம்பவத்தைக் கண்டித்து அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவு மக்கள் எவ்வாறு ஈ.பி.டி.பியினரின் அடாவடித்தனங்களாலும அராஜகத்தாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டு வந்தார்களோ அதேபோல் நீண்ட நெடுங்காலமாகவே நெல்லியடி பொதுமக்களும் ஈ.பி.டி.பியினரின் அராஜகத்தாலும் அடாவடித்தனங்களாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டே வந்துள்ளார்கள். அமைதியையும் சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையையும் வேண்டிநிற்கும் தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப்பசியோடு ஆயுதமும் காட்டி அப்பாவி மக்களை சுட்டும் கைதுசெய்தும் கடத்தியும் அவர்களது உடைமைகளைக் கொள்ளை அடித்தும் இதுபோன்ற பல கொடுமைகளை புரிந்துவந்த ஈ.பி.டி.பியினரின் அச்சுறுத்தல்கள் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையை திட்டமிட்டே குழப்பிவந்துள்ளன.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் மக்கள் மததியில் சுயமரியாதை உணர்வுகள் மேலெழுந்து வருவதை யாரும் மறைக்கமுடியாது. இதனால் தம்மை ஆயுதமுனையில் அச்சுறுத்தும் ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவினரை மக்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறும்படி கேட்டதற்கு அவர்களுக்கு சட்ட ரீதியான உரிமை மட்டுமல்ல தார்மீக ரீதியான கடமையும் உண்டு. இது ஐ.நா. சாசனத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையே மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடியில் சாத்வீக வழியில் ஒன்றுகூடி ஈ.பி.டி.பியினரிடம் கேட்டுக்கொண்டார்கள். ஆனால, ஈ.பி.டி.பியினர் பொலீஸாரையும், இராணுவத்தினரையும் ஏவிவிட்டு இராணுவ மொழியில் மக்களைச் சுட்டும் அடித்துத் துன்புறுத்தியும், கைதுசெய்தும் வந்துள்ளனர். ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த கண்ணன் என்பவரே கைக்குண்டை வீசி மக்களைக் காயப்படுத்தியுள்ளார். நெல்லியடிக்கு விரைந்து வந்த ஏ.எஸ்.பி.ஜானககுணதிலக தலைமையிலான அரச படையினர் மக்களைத் தேடித்தேடி கடைகளில் இருந்த உரிமையாளர்களையும் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர். சட்டத்தையும், ஒழுங்கையும், அமைதியையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொலீஸாரே சட்டத்தை தமது கையில் எடுத்து ஒழுங்குகளை சீர்குலைத்து சட்டத்தை தமது காலில போட்டு மிதித்துள்ளார்கள்.

நெல்லியடியில் பொலீஸாரும் அவர்களோடு இணைந்து செயற்படும ஈ.பி.டி.பியினரும் நடத்திய இந்த அடாவடித்தனங்கள் 1974ஆம் ஆண்டு யாழ்நகரில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைச் சம்பவங்களுக்கு ஒப்பானதாகவே நாம் கருதுகிறோம்.

மேலும் தமிழ் பேசும் மக்களது நியாயபூர்வமான போராட்டத்தை சர்வதேச மயப்படுத்துவதில் ஐ.பி.சி. வானொலி பெரும் பங்காற்றி வருகிறது. அதன் முன்னைய ஊடகவியலாளர் திரு.நிமலராஜன் அவர்கள் ஈ.பி.டி.பி. குழுவினரால் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதுடன் அவரின் மறைவிற்குப் பின் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு இழைக்கப்படும் கொடுமைகளை துணிச்சலோடு ஊடகவியலாளர் திரு.தவச்செல்வன் அவர்கள உலகிற்கு வெளிப்படுத்தி வருகின்றார்.

மேலும் ஈ.பி.டி.பியினர் செய்து வந்த மோசமான செயற்பாடுகளை சர்வதேச உலகிற்கு அம்பலப்படுத்தியதன் காரணமாக இவரது உயிருக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல் ஈ.பி.டி.பியினரால் விடுக்கப்பட்டே வந்துள்ளது. இந்த கொலை முயற்சியின் தொடர்ச்சியாகவே நெல்லியடியில் வைத்து செய்தி சேகரிக்கச் சென்ற தவச்செல்வன் மீதும் ஏனைய செய்தி யாளர்கள் மீதும் திட்டமிட்ட கொலை முயற்சியினை ஈ.பி.டி.பியினர் மேற்கொண்டுள்ளனர்.

பொதுமக்களையும், ஊடகங்களையும் ஆயுதமுனையில் அடக்கிவிட்டு சமாதான முயற்சிகளை குழப்பியடிப்பதில் ஈ.பி.டி.பியினர் முனைப்புடனே குடாநாட்டில் இன்று செயற்பட்டு வருகின்றனர்.

ஜனநாயகம் பற்றியும் சமதர்மம் பற்றியும் இவர்கள் பேசுவது வெறும வார்த்தையாகவே தொடர்கின்றன. இவர்களது முகமூடியைக் கிழித்து சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையையும் பேண தொடர்ந்தும் சரியான பாதையில் மக்கள் செயற்படுவார்கள் என்பதில் எமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு.

அரசியல் பணிகளை மேற்கொள்ளும் எந்த அமைப்புகளும் ஆயுதங்களுடன் மக்கள் மத்தியில் நடமாடக்கூடாது என்பதை புரிந்துணர்வு உடன்படிக்கை உணர்த்துகின்றபோதும் இதனை உணர்ந்துகொள்ளாது ஈ.பி.டி.பியினர் அரச படையினருடன் சேர்ந்து மக்களைக் கொல்ல முனைவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. இதன் காரணமாக வடமராட்சியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தினை மன்னிக்கமுடியாத குற்றமாகவே நாம் கருதுகின்றோம். ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அனைத்துத் தரப்பினரும் தண்டிக்கப்படுவதுடன் மக்களின உண்மையான விருப்பிற்கு யாரும் தடையாக இருக்கக்கூடாது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம் - என்றுள்ளது.



எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவிருக்கும் திரைக்கதை உருவாக்கலுக்கான பயிற்சி முகாம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் கவுன்சில் இயக்குநர் ரொனி பிரைன், அவரது துணைவியாரும் கலாசார அரசியல் பிரதிநிதியுமான ஜொலண்டா, ஓ-பிரைன் ஆகியோருடன் ஸ்கிறிப்ற் நெற் நிகழ்ச்சித் திட்ட வள ஆளுநர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக பிரதிநிதிகளை படத்தில் காணலாம்.


Computer College
கணனிக் கல்லூரி
Center for Computer Studies CC
337, Kasthuriyar Road, Jaffna
E - Mail : collegeofcom@bharatmail.com
Phone & Fax : 021 - 2223497

2004 உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கென கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் தொழில் நுட்ப ( GIT ) பாடத்திட்டத்துக்கான கற்கைகளை யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக ஆரம்பித்த பெருமையுடன் இரண்டாவது வருடத்தில் காலடி பதிக்கின்றோம்..

2005 பிரிவினர்

15 - 12 - 2002 ஞாயிற்றுக்கிழமை
காலை - 10.00 மணி
மாலை - 3.30 மணி

ஏனைய புதிய பிரிவுகள் :
Diploma Courses :
Dip. in. Microsoft Office
Dip. in. Desktop Publishing.
Dip. in. Web Designing
Certificate Courses in:
Ms - Word, Ms - Excel, Ms - Power point, Ms - Access, Corel DRAW, PageMaker, Photoshop & Internet - E mail.

கணனி கற்கைகள்
கணனி பராமரிப்பு
கணனி விற்பனை
இணைய சேவைகள்

www.computercollege.ac.lk


# மரண அறிவித்தல்கள்

## வீரவாகு கணபதிப்பிள்ளை

*(அரச கட்டட ஒப்பந்தகாரர், அநுராதபுரம்)*

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரவாகு - பாறுபதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் நாகாத்தை, சீதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகநாதன்(கிராம அலுவலர், புலோலி தெற்கு), சாரதாதேவி(ஆஸ்திரேலியா), சகுந்தரநாயகி(லண்டன்), ஆனந்தி(ஆஸ்திரேலியா), திருநாதன்(அமரர்) ஆகியோரின் தந்தையும் ரதி, கணேசமூர்த்தி(பொறியியலாளர், ஆஸ்திரேலியா), விக்னேஸ்வரன் (கணக்காளர், லண்டன்), ஸ்ரீதரன்(பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஜனகன், அபிராமி, தனஞ்சன், கோகுலன், காயத்திரி, யாழினி, ராகுலன், நகுலன், விபுலன், விதுஷின் ஆகியோரின் பேரனுமாகிய வீரவாகு கணபதிப்பிள்ளை 11.12.2002இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புலோலி தெற்கு பிலாவடி வீதியிலுள்ள அவரது 'திருபதி' இல்லத்தில் 12.12.2002 வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்று, புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

தகவல்: க.சண்முகநாதன் *(மகன் - கிராம அலுவலர்)*

*புலோலி தெற்கு.* (C/25372)

## கிருஷ்ணபிள்ளை செல்லத்துரை

அல்வாய் வடக்கு மகாத்மா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை செல்லத்துரை நேற்று (12.12.2002) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி விஸ்வலிங்கம் ஜெயராணி(கனடா) அன்புத் தந்தையும் ஜெபிதா, கவிதா, விஜயப்பிரகாஷ், விதுஷின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*மகாத்மா வீதி,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.* (11685)

தகவல்: க.வெற்றிவேல் *(மைத்துனன்)*

## வடிவேலு பார்வதி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை வடிவேலுவின் அன்பு மனைவி பார்வதி 11.12.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*210, காரைநகர் வீதி,*
*(விஸ்லூன்றிப் பிள்ளையார்*
*கோயில் அருகில்)*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (11686)

தகவல்: ஐ.வடிவேலு (யாழ்.பாய்க்கடை உரிமையாளர்)

## நாகரட்ணம் சின்னம்மா

முன்னாணை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் இராசகாரியார் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் - சின்னம்மா 10.12.2002 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் சுப்பிரமணியத்தின் (மலேசியா) அன்புச் சகோதரியும் தங்கவேல்ராசா (C.C.R.C.), சண்முகநாதன் (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதா, ராதிகாவின் அன்பு மாமியாரும் துஷாந்தன், தர்ஷாந்தன், சஜூனா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 10.12.2002 அன்று மானிப்பாயில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராசகாரியார் வீதி,*
*மானிப்பாய்.* (11687)

தகவல்: தங்கவேல்ராசா (மகன்)

# நாட்டில் உற்பத்தி குறைவதினால் அபிவிருத்தி இல்லாமல் போகிறது

## அதனைத் தவிர்க்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார் விமல் ஜயவர்தன

*கேள்வி:* உங்களுடைய வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது தொடர்பாகக் கூறமுடியுமா? எவ்வாறு அடித்தளம் இடப்பட்டது?

*பதில்:* நான் இந்த வியாபாரத்தை எங்கள் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான உபுல் ஏக்கநாயக்கவுடன் சேர்ந்தே ஆரம்பித்தேன். அதற்கு முன் சி.எப்.எல். நிறுவனத்தில் வேலை செய்தேன். அங்கிருந்து நான் விலகியபோது எனக்குக் கிடைத்த 3,500ரூபா பணத்தோடு எனது தந்தையிடமிருந்தும் உபுலிடமிருந்தும் கிடைத்த பணத்துடன் சுமார் 7,500 ரூபாவைத் திரட்டி அந்த மூலதனத்துடன் எனது வர்த்தகத்தை ஆரம்பித்தேன்.

தலைமன்னார்மூலம் கப்பலில் இந்தியா சென்று வியாபாரத்துக்குத் தேவையான இயந்திரங்களை எடுத்து வந்தோம். 26 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவம் இது.

*கேள்வி:* உங்களுடைய வர்த்தகத்தின் தன்மை குறித்து சற்று விளக்கிக் கூறுவீர்களா?

*பதில்:* எங்களுடைய உற்பத்திகளில் அதிகமானது இயந்திர தொழில்நுட்ப உற்பத்திகளாகும். குறிப்பாக குளிரூட்டி இயந்திரம், குளிரூட்டிகள், குளிர்பானம் தயாரிக்கும் இயந்திரம், நெல் ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள், பலகை வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் போன்றவற்றை நாம் உற்பத்தி செய்கின்றோம். அத்தோடு இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகளில் பாரிய வேலைத்திட்டங்களுக்கு உலோகங்களை ஒட்டும் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கிறோம்.

*கேள்வி:* புதிய உற்பத்திகளைச் செய்வதற்கு நீங்கள் பெற்றுக்கொண்ட கைத்தொழில் அறிவைப் பற்றிக்கூற முடியுமா?

*பதில்:* ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்ட பின் கட்டுபெத்த பல்கலைக்கழகத்தில் கைத்தொழில் துறையில் உயர் கல்வியைத் தொடர்ந்தேன். பிற்காலத்தில் என்னுடைய அந்த அறிவை வெளிநாடுகளுக்குச் சென்று அதிகரித்துக் கொண்டேன். சிறுவயது முதலே ஏதாவது புதிது புதிதாக உற்பத்தி செய்யவேண்டுமென்பது எனது ஆசையாக இருந்தது. எந்த நேரத்திலும் புதிதாக ஏதாவது ஒன்றை உற்பத்தி செய்யும் முயற்சியில் நான் ஈடுபடுவேன்.

*கேள்வி:* நாட்டின் அபிவிருத்திக்கு உங்களுடைய ஆலோசனை என்ன?

*பதில்:* நாட்டின் அபிவிருத்தி சீரிய உற்பத்தியிலேயே தங்கியிருக்கிறது. உலகம் முழுவதும் இருக்கும் உதாரணங்களை இதற்குச் சாட்சியாகக் கூறலாம். ஒவ்வொரு நாடும் என்ன உற்பத்தி செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கவேண்டும். நாட்டினுடைய அபிவிருத்தியில் மூன்று காரணங்கள் தாக்கம் செலுத்துகின்றன. அவை காலம், பூகோளரீதியில் நாடு அமைந்துள்ள இடம் மற்றும் நாட்டினுடைய ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை என பனவாகும்.

எங்களுடைய நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும் என்றால் கட்டாயமாக கைத்தொழிலையும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும். இந்த இரண்டு பிரிவுகளிலும் எமது உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். உதாரணம் ஒன்று கூறுவதானால் நாம் 20 வருட காலம் யுத்தம் செய்தோம். இருந்தும் துப்பாக்கிக்கு குண்டு தயாரிப்பதற்கு நாம் முயற்சிக்கவில்லை. நாம் ஏதாவது ஒன்றை புதிதாக உற்பத்தி செய்தோமேயானால் அதை தைரியமாகச் சந்தைக்கு விடுவதற்கு வாய்ப்பொன்றைத் தரவேண்டும்.

*கேள்வி:* எமது நாட்டினுடைய உற்பத்தி குறைவதற்கான காரணமாக நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்?

*பதில்:* நாட்டினுடைய உற்பத்தி குறைகின்றது என்பது நாட்டின் அபிவிருத்தி இல்லாமல் போவதாகும். இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம்?

உற்பத்திகளை வெளிநாடுகளிற்கு அனுப்பி வெளிநாட்டு வருமானத்தை பெறுகின்றோம். அப்பணத்தைக் கொண்டு இயந்திரம் என்பவற்றைப் பெற இன்னுமொரு நாட்டுக்கு செல்கின்றோம்.

ஏன் அவற்றையே இங்கேயே உற்பத்தி செய்ய எங்களால் முடியாதா? அனைத்தையும் இலங்கையிலேயே உற்பத்தி செய்யமுடியும் என்று நான் கூறுகிறேன். அதிலும் இலங்கையில் உற்பத்தி செய்யமுடியாதவற்றின் உதிரிப்பாகங்களைக் கொண்டுவந்து இங்கேயே பொருத்தமுடியாதா?

இருந்தாலும் இங்குள்ள சில சட்டங்களினால் அவ்விதம் செய்யமுடிவதில்லை. நாட்டிலுள்ள அரசியல்வாதிகளும் வியாபாரிகளும் ஒரே குழியில் வழந்துள்ளனர். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சி எடுத்து எப்படியாவது இக்குழியில் இருந்து வெளியே வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதைவிடுத்து தனித்தனியே வியாபாரிகள் பாரிய பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். நாங்கள் பெரும்பாலான நேரங்களில் செல்வது தரச சான்றுகளின் பின்னாலேயே. எஸ்.எல்.எஸ். என்கின்றார்கள், ஐ.எஸ்.ஓ என்கிறார்கள். ஐ.எஸ்.ஓ. தரச்சான்று பெறுவதற்கு 5 லட்சம், 10 லட்சம் செலவு செய்யவேண்டும். இந்தியாவில் இதற்கு 50 ஆயிரம் மாத்திரமே செலவாகும். ஆனால், ஐ.எஸ்.ஓ. சான்றின்மூலம் பொருள்களின் தரத்தைப் பார்ப்பதில்லை அதனை உற்பத்தி செய்கின்ற நிறுவனத்தைப் பற்றியே பார்க்கின்றார்கள்.

வேறுவேறு நாடுகளில் 10-15 வருடங்கள் தமது உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து தமது நாட்டின் அதிலிருந்து மீளமுடியாது. எங்களுக்கென்று தேசியக் குறிக்கோள் இல்லை. அதனால் ஆட்சியில் இருக்கும் அரசு அந்தந்த நேரத்திற்கு தமது குறிக்கோளை மாற்றுகின்றது.

இந்த நிலையினால் உள்நாட்டு சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பார்கள். அதன் பின் அப்பொருளின் தரத்தை அதிகரிக்க சர்வதேச சந்தைக்குள் பிரவேசிப்பார்கள். ஆனால், இங்கு அவ்வாறு இல்லை. நாங்கள் பிழையான பாதையில் செல்கின்றோம்.

*கேள்வி:* நாட்டின் சொத்துக்கள் தனியார் மயப்படுத்தப்படுவது தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?

*பதில்:* உண்மையில் அது நல்ல விடயம். நான் இவ்வாறு கூறுவது ஓர் அனுபவத்தினூடாகவே. நாங்கள் அரச நிறுவனங்களுக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கு குத்தகை முறையைப் பயன்படுத்துகின்றோம். குத்தகைக்கான குழுவொன்றை நியமிக்கின்றோம். அக்குழுவுக்கு வேறு அரச நிறுவனங்களில் இருந்து அதிகாரிகளை நியமிக்கின்றோம். இந்த அதிகாரிகள் அனைவரும் ஒன்றாக இருந்து குத்தகை வழங்குவது தொடர்பாகத் தீர்மானிக்கவேண்டும்.

ஆனால், அந்த அதிகாரிகளுக்கு இருக்கின்ற வேலைப்பளு காரணமாக ஒன்றாகக் கூடுவதற்கு அவர்களுக்கு நேரம் வாய்ப்பதில்லை. எனவே, குத்தகை வழங்கத் தாமதமாவதனால் அந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வரக் காலம் செல்கின்றது.

குத்தகை தொடர்பான பொறுப்பை ஏற்கக்கூடிய ஒருவர் இல்லை. ஏனெனில் இங்கு குழுவொன்றே காணப்படுகின்றது. ஒரு நபருக்கு இதன் பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தால் அவருக்குக் குத்தகை தொடர்பாகத் தீர்மானமெடுக்கமுடியும்.

இந்த அம்சம் தனியார் நிறுவனங்களில் காணப்படுகின்றது. இதனால் தனியார் மயப்படுத்தலினூடாக அதிகாரிகளுக்கு ஒரு சில அதிகாரங்கள் கிடைக்கின்றன. அது வரவேற்கப்படவேண்டியது.

*கேள்வி:* தனியார் மயப்படுத்தலினால் தேசிய நிறுவனங்களின் உரிமைகளை வெளிநாட்டு நிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றனவே?

*பதில்:* அது உண்மைதான். அதனை நாம் தடுக்கவேண்டும். தனியார் மயப்படுத்தலை ஒரு வரையறைக்குள் செய்வதன்மூலம் இதனைத் தடுக்கலாம்.

*கேள்வி:* திறந்த பொருளாதார முறை உங்களுடைய வியாபாரத்தை எவ்வாறு பாதித்தது?

*பதில்:* திறந்த பொருளாதார முறை பற்றி நோக்கும்போது, பொருளாதாரத்தை அளவுக்கதிகமாகத் திறந்துவிட்டிருப்பது விளங்கும். எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு பொருளாதாரத்தைத் திறந்துவிடாமல், உற்பத்தி செய்ய முடியாத பொருள்களுக்கு மாத்திரம் பொருளாதாரத்தைத் திறந்துவிட்டால் பிரச்சினையில்லை. திறந்த பொருளாதார முறையின் கீழ் வெளிநாட்டில் இருந்துவரும் பொருள்களுக்கு சுங்கத்தீர்வை பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் என்னுடைய வியாபாரத்தைத் திறந்த பொருளாதார முறை பாரியளவில் பாதித்துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் 'இலக்ட்ரோ என்ஜினியரிங்' நிறுவனத்தின் தலைவரான விமல் ஜயவர்தன. ★




ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்குநேர்' நிகழ்ச்சியில் 'இலக்ட்ரோ என்ஜினியரிங்' நிறுவனத்தின் தலைவரான விமல் ஜயவர்தனவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கின்றார்கள்.

### வர்த்தக ஸ்பெஷல்

*ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 10ஆம் திகதி தோன்றித் தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் பிரபல தொழிலதிபர் விமல் ஜயவர்தன.*

*"இலக்ட்ரோ என்ஜினியரிங்" நிறுவனத்தின் தலைவரான விமல் ஜயவர்தன மிகக் குறுகிய காலத்தில் பல வர்த்தக வெற்றிகளைத் தேடிக் கொண்டவர்.*

*நாட்டின் அபிவிருத்தி உற்பத்தித் துறைகளில் செய்யவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பல் வேறு திட்டங்களை அவர் கொண்டிருக்கிறார்.*

*நாட்டின் தேசிய உற்பத்தியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் விமல் ஜயவர்தன விரிவாக விளக்கியிருக்கிறார்.*

*ரீ.என்.எல். தொலைக்காட்சியில் விமல் ஜயவர்தனவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.*

*செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.*



பிரிட்டனில் தலைமையகத்தைக் கொண்ட சர்வதேச பட்டய வங்கியாளர் நிறுவனத்தின் பரீட்சை ஒழுங்கமைப்பாளர் டேவிட் ரூஸ், பட்டய வங்கியாளர் கற்கைநெறிகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வது தொடர்பாக ஆராய நேற்றுமுன்தினம் இங்கு வந்திருந்தார். இலங்கை வங்கியாளர் சங்க யாழ்.கிளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளின் தலைமை அதிகாரிகள் - டேவிட் ரூஸ் சந்திப்பு 'உதயன்' கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள். படம்: பத்மராஜ

# பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணம், 28, கொண்டடி வீதி, குருநகரைச் சேர்ந்த

## திரு.சிங்கராயர் மரியநாயகம்

அவர்கள் 11.12.2002ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் யாழ்ப்பாணம் நீதி நிர்வாகத்திற்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார் என்பதனையிட்டு இவரின் சேவை சிறந்தோங்கி மேன்மேலும் சிறப்புறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*இல.28, கொண்டடி வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

உறவினர்களும்,
நண்பர்களும்.

*குறிப்பு :* நேற்று வெளியான இந்த விளம்பரத்தில் பாராட்டப்படுபவரின் படம் மாறிப் பிரசுரமானமைக்கு மனம் வருந்துகின்றோம். (11657)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
-
09
-
1941



உதிர்வு
04
-
12
-
2000

## அமரர் கார்த்திகேசு வேலாயுதபிள்ளை

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன முன்னாள் லிகிதர்)

திதி: 12-12-2002

*அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்*
*அவனியிலே வாழ்ந்த அன்புத் தெய்வமே! அப்பாவே!!*
*உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*புகையிரத வீதி,*
*கொடிகாமம்.*

- குடும்பத்தினர்

*குறிப்பு :* நேற்று வெளியான இந்த நினைவஞ்சலி விளம்பரத்தில் அஞ்சலிக்குரியவரின் படம் மாறிப் பிரசுரமாகியமைக்காக மனம் வருந்துகிறோம். (11653)

# நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



## தவமணி விசுவநாதன்

13.11.2002 எமது அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்னையின் மறைவையொட்டி ஜேர்மனியில் நேரடியாகப் பங்கு பற்றி ஆறுதல் கூறியோருக்கும் தொடர்ச்சியாக அனுதாபச் செய்திகளை அனுப்பிய நண்பர்கள், இனத்தவர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். தொடர்ந்து நீர்வேலி தெற்கில் அன்னாரது இல்லத்தில் 13.12.2002 நண்பகல் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண வைபவத்தில் பங்குபற்றி மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் நண்பர்களையும், இனத்தவர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

1) பஞ்சலிங்கம் புனிதவதி - இலங்கை.
2) உருத்திரராசா லலிதா - ஜேர்மனி.
3) சர்வானந்தம் மீனகாந்த - கனடா.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (11689)

# உலர் உணவு இன்று விநியோகம்

நல்லூர்,டிசெ.13

திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர்குளம் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டோருக்கான இரண்டாம் கட்ட உலர் உணவுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இப்புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டோர் இன்று காலை வாலையம்மன் சனசமூக நிலையத்திற்குச் சென்று தமக்குரிய உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று வாலையம்மன் சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். உலக உணவுத்திட்டம் தனது புனரமைப்புத்திட்டப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, ரின்மீன் போன்ற உணவுப்பொருள்களையே கொடுப்பனவாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி)

# வசதியற்ற நிலையில் ஊர்காவற்றுறை தபாலகம்

ஊர்காவற்றுறை,டிசெ.13

ஊர்காவற்றுறை பிரதம தபால் அலுவலகம் போதிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தனியார் கட்டடமொன்றில் தற்பொழுது இயங்கி வருகிறது.

தீவுப்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளை அடுத்து ஊர்காவற்றுறை - சுருவில் வீதியில் அமைந்திருந்த பிரதம தபாலகக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது. பின்னர் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இது தற்போது இயங்கிவருகின்றது.

எனவே, குடாநாட்டில் உள்ள ஏனைய தபாலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இதர வசதிகள் இங்கும் வழங்கப்படவேண்டும் என பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-16)

# கணவனை இழந்த பெண்களுக்கு தையல் இயந்திரம்

குடாநாட்டில் கடந்தகால வன்செயல்களில் கணவனை இழந்த பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்க 200 தையல் இயந்திரங்களை சமூக சேவைகள் அமைச்சு வழங்கவிருக்கிறது.

எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அமைச்சர் ரவீந்திர சமரவீர, தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்யவிருக்கிறார்.

இந்த உதவியைப் பெறுவதற்கு இதுவரை 50 பெண்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் -

மேலும் பெண்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தால் அவர்களுக்கும் இந்த உதவியை வழங்கமுடியும் என்றும் - செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

# சங்கக் கடை மூடப்பட்டது

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சண்டிலிப்பாயில் நடத்தப்பட்ட கிளைச் கடை அண்மையில் மூடப்பட்டுள்ளது. இக் கிளைக் கடையில் நிவாரணப் பொருள்கள் பெற்றுவந்த குடும்பங்கள் சுன்னாகத்தில் உள்ள கிளைக் கடையில் பெற்றுக்கொள்ளலாமென சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார்.

இதேவேளை, சரசாலை தெற்கு கிளைக் கடை கடந்த 10ஆம் திகதி தொடக்கம் பழைய இடத்தில் மீண்டும் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-117)

# பொதுப்பணி மன்றக் கூட்டம்

நல்லூர் பொதுச்சந்தை புனரமைப்பு தொடர்பாக வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. மன்றத்தின் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் இ.இரத்தினசபாபதி தலைமையில் இடம்பெறவுள்ளது. பொதுச் சந்தைப் பகுதியில் வங்கிக் கிளை ஒன்றையும், வசதிகள் கொண்ட தபாலகத்தையும் நிறுவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நேரில் கோருவது என்றும் - இதற்கு ஆதரவாக பிரதேச வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் கையொப்பங்களைச் சேகரித்து மகஜர் ஒன்றை தயாரிக்கவும் வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம் தீர்மானித்துள்ளதாகவும் மன்றத்தின் செயலாளர் கு.அருள்நாயகம் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாகவும் மன்றக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (ஐ-ரி)

# முகத்துவாரம் பகுதியில் கைக்குண்டுத் தாக்குதல்

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் நேற்றுமுன்தினம் பொலீஸார் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

இப்பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் சிலர் ஈடுபட்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலீஸார் அங்கு சென்றபோதே அவர்கள் மீது கைக்குண்டு வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி பொன்னையா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா அவர்கள் 09.12.2002 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் ஆகியோரின் அன்புப் புதல்வரும் மகாலட்சுமி, பாலசுப்பிரமணியம் (நீர்ப்பாசன பொறியியலாளர், அம்பாறை), பத்மகுணசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைசிங்கம், சந்திரா (அதிபர், சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருமலை), மங்களேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான அம்மாகுட்டி, தம்பித்துரை, அன்னம்மா மற்றும் முத்துக்குமாரு (கனடா), நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இளங்குமார்(ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), சதீஸ்குமார்(ஜேர்மனி), சந்திரகுமார், நிர்மலா (கனடா), மாலினி, ரஞ்சித்குமார், சஞ்ஜேயன், அபிராமி, பாமினி, அருண் (ஜேர்மனி), விகிர்தா (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி), ராஜனி (ஜேர்மனி), கரிகரன் (கனடா), மனோகரன் (யாழ்.மாநகரசபை) ஆகியோரின் அன்புப் பேரனும் இந்துஜா (ஜேர்மனி), துளசி (ஜேர்மனி), சுகிர்தன் (ஜேர்மனி), சஞ்சீவ், சர்மிலன் (கனடா), கபிலன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.12.2002) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*செல்வநாயகம் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
(11637)

தகவல்:
திரு.I.துரைசிங்கம் (மருமகன்)
திரு.P.பாலசுப்பிரமணியம் (மகன்)

## சரவணமுத்து விவேகானந்தராஜா

(முன்னாள் உரிமையாளர், உமா இன்டஸ்ரீஸ்)

கம்பஸ் லேன், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்போது வசிப்பிடமாகக் கொண்டவருமான சரவணமுத்து விவேகானந்தராஜா 11.12.2002 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா.சரவணமுத்து மற்றும் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் யோகராஜா, சண்முகராஜா, தியாகராஜா, காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் லலிதாதேவியின் அன்புக் கணவரும் வாசுகி, கல்யாணி, விஜிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தற்போது இங்கிலாந்தில் வசிக்கும் திரு. திருமதி ஆனந்தவேலின் அன்பு மருமகனும் இராஜன், ஆனந்தன், திருமதி யோ. சறோஜினிதேவி, திருமதி ச.இராஜசுலோசனா (ஸ்ரெலா), ந.இரங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2002 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7, பிள்ளையார் வீதி,*
*தபால் பெட்டியடி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

கனடா முகவரி:
***15-1032. DAKUTA AVENUE,***
***OTTAWA, ONTARIO,***
***K.I.G, W,***
***CANADA.***

தகவல்:
திருமதி சரவணமுத்து பாக்கியம் (தாய்),
ச.யோகராஜா
ச.சண்முகராஜா } சகோதரர்கள்
ச.தியாகராஜா
(11691)

## செல்லையா இராஜதுரை

கொக்குவில் மேற்கு, பூனாரிமடத்தடியைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு, சித்திவிநாயகர் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராஜதுரை நேற்று (12-12-2002) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா சுந்தரத்தின் மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக்கணவரும், பாலசுப்பிரமணியம், மங்களேஸ்வரி, சறோஜினிதேவி, பாலச்சந்திரன் (நீர்கொழும்பு), சந்திரமலர், பாலபாஸ்கரன்(இந்தியா), பாலரஞ்சினி(நோர்வே), விஜயகுமார்(இத்தாலி) ஆகியோரின் அன்புத்தந்தையும் விமலாதேவி, அருமைத்துரை, கனகசபை, மீனாலோஜினி(நீர்கொழும்பு), பாலசுப்பிரமணியம், சரோஜினிதேவி, பரிமளகாந்தன்(நோர்வே), பிறேமமாலினி(இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-12-2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*சித்திவிநாயகர் கோவிலடி,*
*உடுவில் தெற்கு,*
*உடுவில்.*
(11692)

தகவல்:
இ.பாலசுப்பிரமணியம்,
இ.பாலச்சந்திரன்,
(மகன்மார்)

## திருமதி அன்னலட்சுமி இராசரெத்தினம்

திருமதி அன்னலட்சுமி இராசரெத்தினம் அவர்கள் 10.12.2002 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரவேலு - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பார்வதிதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் சகுந்தலாதேவி, விமலாதேவி, தேவராசா (பிரான்ஸ்), நவீந்திரன் (பிரான்ஸ்), சுபத்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகராஜா, சிவசுப்பிரமணியம், தயாரூபி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ராஜதேவன் (டோகா), றஜனிகாந், சோபனா, சோபிகா, சுதர்சன், ரஜிதா, ரேணுகா, பிரான்ஸில் வசிக்கும் ஹேமலதா, ஹேமராஜ், விக்கினேஸ்வரன், விதுஷன், தீபிகா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், திருநாவுக்கரசு, அன்னபூரணி மற்றும் மங்கையர்க்கரசி, சரஸ்வதி (இத்தாலி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (13.12.2002) வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19, நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (11694)

தகவல்:
இராசரெத்தினம்
(கணவர்)

# மக்களின் சகல உரிமைகளையும் அரசமைப்பு உறுதிப்படுத்த வேண்டும்

## கருத்தரங்கில் தென்னாபிரிக்க நீதிபதி உரை

யாழ்ப்பாணம்,டிசெ.13

நாட்டின் அரசமைப்பானது தேர்தலுக்கு மட்டும் பயன்படுவதாக இருக்கக் கூடாது. அது மக்களின் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரான நீதிபதி அல்பி சசெஸ் (Albie Sachs) இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பழைய பூங்கா வீதியில் உள்ள 'யாழ் பீச் இன்' ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற 'மாற்றமடைந்து வரும் நதி நிர்வாகம்' எனும் தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பை உருவாக்குவதில் மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அதனை தமது அரசமைப்பு என்று மக்கள் சொல்ல முடியாது. அதில் நீதி, சமாதானம் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும் நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்தக் கூடியதாக அரசமைப்பு இருக்க வேண்டும்.

மக்களின் பிரச்சினைகளை அரசமைப்பினால் தீர்க்க முடியாது. அவற்றுக்கு அரசுகள் தான் இணங்கிப் போக வேண்டும். சமஷ்டி அமைப்பானது சிறந்ததோர் அமைப்பாக இருக்க முடியும். தற்பொழுது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்தத்தை இருசாராரும் நேர்மையுடன் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார்.

கடற்படையின் பதில் பிராந்தியத தளபதி கொமடோர் பி.எல்.என்.ஒபயசிங்க உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்பும் பல யுத்தமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சமாதான வழிமுறைக்கு இவையும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன. படையினரும் புலிகளும் இன்னும் உண்மையான புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளவில்லை. அவ்வாறு நம்பிக்கையூட்டும் விதத்தில் புரிந்துணர்வுடன் நடந்து கொண்டால் சில விடயங்களில் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளலாம். நாங்கள் அரசின் பிரதிநிதிகள். மக்களைப் பாதுகாப்பது எங்கள் கடமை. அதேபோன்று ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்களில் இருந்து நாங்கள் வெளியேறுவதற்கு முன்பு வேறு இடங்களில் எமக்குரிய முகாம்களை அமைக்க வேண்டும். அதன்பின்பு நாம் அவற்றில் இருந்து வெளியேறுவோம் - என்றார்.

இக்கருத்தரங்கில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், கடற்படை அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை பிரதிநிதிகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-10-8)

### பங்குச் சந்தை வர்த்தகம் பயிற்சிப்பட்டறை

யாழ்.வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பங்குச்சந்தை வர்த்தகம் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பங்குச் சந்தை வியாபாரத்தில் ஈடுபடும் பாட்லிற் நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்தப்பட்டறையில் பங்கு பற்றவிருக்கின்றனர். (ஐ-3)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மின்சாரம் இன்றி சிரமம்.

தென்மராட்சி,டிசெ.13

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இன்னமும் மின்சார வசதி வழங்கப்படாததால் ஆஸ்பத்திரிக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்படும் குளிரூட்டிப் பாதுகாக்கப்பட வேண்டிய மருந்து வகைகள் கோப்பாய் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தினமும் இந்த ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் காலையிலும் மாலையிலும கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு மருந்துகள எடுத்துவரச் செல்வதாகவும் சொல்லப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் குளிரூட்டல் பெட்டி உள்ளபோதிலும், மின்சாரம் இல்லாததால் இயங்க முடியாமலுள்ளதாகவும தெரியவருகிறது. (ஒ-117)

### மீள் குடியமர்ந்த பிரதேசங்கள் பற்றி விவரங்கள் சேகரிப்பு

வலி.மேற்கு,டிசெ.13

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட பிரதேசங்களில் சேதமடைந்த வீடுகளின் முழு விவரங்களையும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் சகல பிரதேச செயலர்களையும் பணித்துள்ளார்.

இது தொடர்பாக அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் முழுமையாகவோ பகுதியாகவோ சேதமடைந்த அரச உத்தியோகத்தர்களின் வீடுகள், மாதவருமானம் ரூபா ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட வருமானத்தை உடையவர்களின் வீடுகள், மாத வருமானம் ரூபா ஆயிரத்து ஐந்நூறுக்கு உட்பட்ட வருமானத்தை உடையவர்களின் வீடுகள் போன்ற விவரங்களை பூரணமாக திரட்டி அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-175)

### லங்கா சிமெந்து முன்னாள் ஊழியருக்கு!

சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்றுக்கொண்ட லங்கா சிமெந்து நிறுவன முன்னாள் ஊழியர்கள் அனைவரையும் இணுவிலில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தின் பிரிவுக் காரியாலயத்திற்கு உடன் வருகைதருமாறு முகாமையாளர் ஆர். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கைநிதி, மீளளிப்பு நிதி ஆகியவற்றை ஊழியர்கள் பெற்றுக்கொள்வதற்கு மேலதிக தகவல்கள் பெற வேண்டி இருப்பதாலேயே உடன் வருகை தருமாறு பணிக்கப்பட்டுள்ளனர். (ஓ)

### பாடசாலை உபகரணப் பொதி விநியோகம்

மண்டைதீவு,டிசெ.13

அண்மைக்காலத்தில் ஏ.9 பாதையூடாக வந்து மண்டைதீவுப் பகுதியில் மீளக் குடியமர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதி இலவசமாக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-88)

### ஓய்வுபெற்ற வங்கியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் பணியாற்றி இளைப்பாறிய மற்றும் விலகிச்சென்ற மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிறுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் கலந்துகொள்ளவுள்ளார்.

தற்பொழுது சேவையில் உள்ள வங்கியாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் ஓய்வூதியம் பெறும் விதவைகளும் (மூத்த வங்கியாளர்களின் மனைவியர்) கௌரவிக்கப்படவுள்ளனர்.

தமது வருகை பற்றி இதுவரையும் தெரியப்படுத்தாதவர்கள் யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் செயலாளருக்கு தமது வருகை பற்றி அறிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஓ-10)

### யுத்தத்தால் சீரழிந்து போயுள்ள

# பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஜப்பானியப் பொறியியலாளர் குழு

## விரைவில் இங்கு வருகை தரும்

மண்டைதீவு,டிசெ.13

குடாநாடு மற்றும் தீவகத்தில் யுத்த அழிவுகளால் சீரழிந்துள்ள பாடசாலைகளை பார்வையிடுவதற்கும, அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகளை மதிப்படு செய்வதற்கும் ஜப்பானியப் பொறியியலாளர் குழு ஒன்று விரைவில் இங்கு வருகைதரவுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

இந்தப் பொறியியலாளர் குழு பொது நிறுவனங்களினது அனுசரணையுமின்றி நேரடியாக பாடசாலை அதிபர்களைச் சந்திக்க உள்ளது.

ஆகவே, பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை வரைபடங்களுடன் கூடிய அபிவிருத்தித் தலைமைத் திட்டத்தை தயாரித்துத் தயாராக வைத்திருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தைப் பார்வையிட்டு திருப்திகாணுமிடத்து திட்டத்தை முழுதாகவோ அல்லது பகுதி யாகவோ அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வர். இதற்கான நிதியை ஜப்பானிய அரசு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்டடத் தளபாட வசதிகள் மட்டுமன்றி கணனி போன்ற நவீன உபகரணவசதிகளையும் இவர்கள் ஏற்படுத்திக்கொடுப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் நடந்த வேலணை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் கல்விப் பணிமனையின் உயர் அதிகாரிகளால் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ஒ-88)

### தென்மராட்சி பகுதிகளில் நுளம்புப் பெருக்கம்

தென்மராட்சி,டிசெ.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்து பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு நுளம்புக்கடியினால் மலேரியா போன்ற நோய்கள் ஏற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது.ஆகவே, இப்பிரதேசத்தில் உடனடியாக மலேரியா தடுப்பு மருந்து விசிற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச பொது அமைப்புக்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கோரியுள்ளன. (ஒ-117)

### நோர்வே, சுவிஸுக்குச் சென்றிருந்த

# தமிழ்ச்செல்வன், கருணா நேற்று வன்னி திரும்பினர்

கொழும்பு,டிசெ.13

ஒஸ்லோவில் மூன்றாம் சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று வன்னிக்குத் திரும்பினர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோரும் அவர்களுடன் சென்ற மூன்று போராளிகளுமே நேற்றுக்காலை எட்டு மணியளவில் கிளிநொச்சி மத்திய மைதானத்தை இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர் மூலம் சென்றடைந்தனர்.

ஒஸ்லோ சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து சுவிட்ஸர்லாந்துக்குச் சென்ற புலிகளின் மூத்த தலைவர்கள் அங்கு நான்கு நாள்கள தங்கிய பின்னர் விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம அவர்கள் வன்னிக்குத் திரும்பினர். (ஐ)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மாணிக்கவாசகர் வித்தியாலயம் கரவெட்டி

எமது வித்தியாலயத்தின் வியத்தகு ஓய்வுபெற்ற தலைமை ஆசான்

உயர்திரு. வ. சின்னையா

அவர்கள் நேற்று காலமானதையிட்டு மிகுந்த மன வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

(C/25378) பாடசாலைச்சமூகம்

## துயர் பகிர்கின்றோம்

தினேஷம்பாள் வெதுப்பக உரிமையாளரின் அன்புத் தாயார்

சோமசுந்தரம் கமலாதேவி

(சீத்தாராமன்)

அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*கல்வியங்காடு.* (11698) தினேஷம்பாள் வெதுப்பகம் ஊழியர்கள்.

இன்று வெளியீடு
எழுதுநர் பரீட்சைக்கான மாதிரி வினாக்கட்டமைப்பு
P.கமல்தாசன்
B.A. cey Dip. in mgt. (ousl)
அறிவமுது. பிள்ளையார்
விலை 45/-

ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
அஜித் (இருவேடங்களில்). மீனா நடித்த
வில்லன்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30



நிறஞ்சனாஸ் சங்கானை
முரளி, பிரத்யூஷா, மனோஜ், உமா நடித்த
"கடற்பூக்கள்"
17 ஆம் திகதி முதல்
AIR FORSE ONE
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே.)
(C/25291)

நாகம்ஸ் சுன்னாகம்
ஷாலினி, கனகா, விவேக் நடித்த
செந்தூர தேவி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பு.நே.)
(11665)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீத்தாராமன் கமலாதேவி

கல்வியங்காடு, செங்குந்தா வீதியைச் சேர்ந்த திருமதி சீத்தாராமன் கமலாதேவி நேற்று(12-12-2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் செல்வி பேக்கரி உரிமையாளர் தங்கராசா, தினேஸம்பாள் பேக்கரி உரிமையாளர் யோகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நவரெத்தினம், நெல்லியடி சித்திரா பப்படக் கொம்பனி உரிமையாளர் நந்தகுமார், சத்தியன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மூத்தமகன் தங்கராசாவின் இல்லத்தில் இன்று(13-12-2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*செங்குந்தா வீதி,*
*கல்வியங்காடு.*
(11695)
தகவல்:
நந்தகுமார்
(மருமகன்)

## திருமதி றோஸ்குயின் அல்பிறட்

கோண்டாவில் கிழக்கு, சென். செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த திருமதி றோஸ்குயின் அல்பிறட் அவர்கள் 11.12.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் சின்னப்பு அல்பிறட் அவர்களின் அன்பு மனைவியும் சுஜாதா, காலஞ்சென்ற டயஸ் மற்றும் சல்பிகா (காவல்துறை), சாள்ஸ், டெனிசன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிஸ்வரனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆரதனைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (13.12.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோட்டைக்காடு சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென். செபஸ்தியார் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
(11697)
தகவல்:
சி.அல்பிறட்
(கணவர்)

## உமாபதி கந்தசாமி

*(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)*

கந்தர்மடத்தைச் சேர்ந்த உமாபதி கந்தசாமி அவர்கள் நேற்று (12.12.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் கருணாகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், R.D.D. - நெல்லியடி), கிருபாகரன் (கரன் நகையகம் உரிமையாளர்), ஞானாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*உமாபதி இல்லம்,*
*57, பலாலி வீதி,*
*கந்தர்மடம்.*
(11699)
தகவல்:
கருணாகரன்
(மகன்)

# அரசியல் துறையினர் பொலீஸார் சந்திப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

நெல்லியடிச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்டுள்ள 14 பேரும் அப்பாவிகள். அவர்களை விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வடபிராந்திய பொலிஸ் அத்தியட்சகரைக் கேட்டுள்ளனர்.

பொலீஸ் அத்தியட்சகரை நேற்று சந்தித்த விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நெல்லியடி சம்பவத்தில் அப்பாவி மக்களே தாக்கப்பட்டுள்ளனர் என்றும் -

கைது செய்யப்பட்ட அப்பாவிகளை உடன் விடுவிக்க வேண்டும் என்றும் - தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் பொலீஸார் நடந்துகொண்ட விதம் குறித்து தமது கண்டனத்தையும் அவர் வெளியிட்டார்.

# தமிழ்ச் சிறுமி மீது பாலியல் வல்லுறவு

கொழும்பு, டிசெ.13

ஹொறவப்பொத்தானைப் பகுதியில் 14 வயது தமிழ்ச் சிறுமி ஒருவர் அப்பகுதியில் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார் என வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரது வீட்டுக்குள் புகுந்த மேற்படி நபர், தமது மகளைத் தன் முன் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுத்தியதாக சம்பந்தப்பட்ட சிறுமியின் தாய் பொலீஸில் முறைப்பாடு செய்திருக்கிறார். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் ஒளிவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் இன்னிசை, நாடகம் ஆகியன இடம்பெறும்.

# ஒலிநாடா வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் உருவான 'தாலேலோ' என்னும் கிறிஸ்து பிறப்புப் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்.திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு போஸ் நட்சத்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மதிப்பீட்டுரையை வைத்தியப் பங்குத்தந்தை சி.ஜே.அன்ரனிபாலாவும் வெளியீட்டுரையை கலாமன்றப் பொதுச்செயலர் ஜோன்சன் ராஜ்குமாரும் நிகழ்த்துவார்கள்.

இந்த ஒலிநாடாவில் பாடல்களுக்கான இசையை இசைத்தென்றல் ம.ஜேசுதாசன் வழங்கியுள்ளார். (ஐ-9)

# நெல்லியடிச் சம்பவம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரி கருணாசேனா ஆகியோர் பொலீஸார் சார்பிலும், நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவரும், யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனத் தலைவருமான மு.சுந்தரலிங்கம், சம்மேளனச் செயலாளரும், யாழ்.வணிகர்கழகச் செயலாளருமான எஸ்.நித்தியானந்தன், யாழ். வணிகர் கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம், உப செயலாளர் எஸ்.ஜனக்குமார், நெல்லியடி வர்த்தக சங்க செயலாளர் எஸ்.தங்கராசா ஆகியோர் உட்பட மற்றும் வர்த்தகப் பிரமுகர்களும் வர்த்தகர்கள் சார்பில் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் அமைச்சர் தி. மகேஸ்வரன் தனது தலைமை உரையில் தெரிவித்ததாவது:-

நெல்லியடியில் வர்த்தகர்கள் மீதான தாக்குதலினால் பொலீஸாருக்கும் வர்த்தகர்களுக்கு மிடையேயான உறவுகள் பாதிக்கப்படக் கூடாது. நாட்டில் சமாதான சூழ்நிலை தோன்றிவரும் இக்கால கட்டத்தில் இம்மாதிரியான நிகழ்வுகள் கவலை தருகின்றன. வர்த்தகர்களின் கோரிக்கைகளை பொலீஸார் ஏற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்வதுடன், வர்த்தகர்கள் பாதிக்கப்படுவதால் பொதுமக்களும் இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. பொதுமக்களின் நன்மை கருதி வர்த்தக நிலையங்களை மீண்டும் திறந்து வழமை நிலையை ஏற்படுத்த பொலீஸார் உதவ வேண்டும் - என்று கூறினார்.

யாழ்மாவட்ட வர்த்தக சங்க சம்மேளனத் தலைவர் மு.சுந்தரலிங்கம் பேசுகையில்:-

ஆர்ப்பாட்டம் எங்கேயோ நடைபெற அதற்கு அப்பால் சுமார் 250 யார் தூரத்தில் உள்ள வர்த்தக நிலையங்களை பொலீஸார் தேடி வந்து வர்த்தகர்கள் மீதும், பொருள்களை வாங்க வந்தோர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றாதவர்கள் மீது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நாம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனின் வர்த்தகர்களாகிய எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் தாக்குதல்களில் ஈடுபட்டோர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

நெல்லியடியில் வர்த்தகர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலீஸார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இனிமேல் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாது என சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பிரேமரத்தன உறுதியளித்தார்.

இதேவேளை, நெல்லியடி தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களை விசாரணைக்காக இன்று வெள்ளிக்கிழமை யாழ்.பொலீஸ் தலைமையகத்துக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# தேசிய அரசு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒஸ்லோ சமாதான மாநாட்டில் ஐக்கிய இலங்கைக்குள் பிரதேச சுயாட்சிக்குத் தயார் என்று அன்ரன் பாலசிங்கம் கூறினாலும்கூட மாவீரர் தின உரையில் தமிழீழக் கோரிக்கை கைவிடப்படவில்லை என பிரபாகரன் தெளிவாகக் கூறியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் பற்றிய விவரங்கள் என்னிடம் மூடிமறைக்கப்பட்டுள்ளன.

என்னைப் பிரபாவிடம் ஒப்படைப்பேன் என 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். அந்த முயற்சியை அவர் இன்றுவரை கைவிடவில்லை.

அரச பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. அரச ஊடகங்களும், சில தனியார் ஊடகங்களும் எனக்கு விரோதமான பொய்யான செய்திகளையும் கட்டுக்கதைகளையும் வெளியிடுகின்றன.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனதுரையில் கூறினார்.

இதேவேளை, அநுராதபுரத்தில் வர்த்தகத்தொகுதி ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் திறந்து வைத்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அநுராதபுரம் நகரபிதா உட்பட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் இந்நிகழ்வைப் பகிஷ்கரித்தனர்.

இந்த சுட்டத்தொகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்படாததாலேயே தாம் திறப்புவிழா வைபகிஷ்கரித்ததாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# குடாநாடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் போக்குவரத்துச் சேவைகள், பஸ் போக்குவரத்துச் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

உணவகங்களும் மூடப்பட்டிருந்தன. வைத்தியசாலைகளிலும் நோயாளிகள் வரவு குறைவாகவே இருந்தது.

யாழ்.நகரின் முக்கிய சந்திகள் பலவற்றில் ரயர்கள் வீதியின் குறுக்காகப் போடப்பட்டு எரிக்கப்பட்டன. நகருக்கு வெளியிலும் ரயர் எரிப்பு, வீதி மறிப்பு என்பன இடம்பெற்றதாக எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவித்தனர். யாழ்.நகரில் கன்னாதிட்டிப் பகுதியில் ரயர்கள் எரிக்கப்பட்டிருந்தன. உடனே அவ்விடத்துக்கு விரைந்து வந்த பொலீஸார் தீயை அணைத்தனர். அவ்விடத்தில் நின்ற இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களிலும் ஹர்த்தால் முழு அளவில் அனுஷ்டிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## கொடிகாமத்தில் பதற்றம்

கொடிகாமத்தில் கண்டி வீதியை வழிமறித்துப் பொதுமக்கள் நடத்திய மறியல் காரணமாக அங்கு நேற்று நண்பகல் வரை பதற்றமான ஒரு நிலைமை காணப்பட்டதாக கொடிகாமம் செய்தியாளர் அறிவித்திருக்கின்றார்.

கொடிகாமம் நகரப் பகுதியில் - கண்டி வீதியில் - மக்கள் தடை போட்டு மறியல் செய்ததால் கண்டி வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது. ஏ-9 வீதிவழியாக வந்த வாகனங்கள் நீண்ட நேரம் தடைப்பட்டு நின்றன. முகமாலை நோக்கிச் சென்ற வாகனங்களும் நிறுத்தப்பட்டன.

பொலீஸார் அங்கு குவிக்கப்பட்டனர். புதன் கிழமைமையை அடுத்து கண்காணிப்புக் குழுவினர் அங்கு வந்து மறியல் செய்தோருடன் பேசி அவர்களை அமைதியாகக் கலைந்து செல்ல வைத்தனர். (ஐ-8-4-10-11-13-31-74-86-153-139-51-117-173)

# நெல்லியடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல்லியடிச் சம்பவத்தை அடுத்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

வர்த்தகர்களின் பாதுகாப்புக்கு பொலீஸார் உத்தரவாதம் வழங்கியதைத் தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை முதல் வர்த்தக நிலையங்கள் யாவும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# 167 இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், இலங்கை குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

சட்டவிரோதமாக பயணஞ்செய்த இவர்கள் ஐந்து தினங்களுக்கு முன் சுவீடிஷ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி இவர்கள் அனைவரும் நீர்கொழும்பிலிருந்து இரண்டு படகுகளில் பயணத்தை ஆரம்பித்தனர் எனக் கூறப்படுகிறது. (ஐ)

# ஈ.பி.டி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதம் அடைந்துள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்றபோது அங்கு காவற்கடமையில் இருந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். ஆயினும், வெடிச்சம்பவத்திலோ, பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்திலோ எவரும் காயம் அடையவில்லை.

நீண்டநாள்களின் பின்னர் இப்பகுதியில் நள்ளிரவு நேரம் எழுந்த வெடியோசைகளால் பொதுமக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். (ஐ-86)

# மரண அறிவித்தல்

## தம்பு அமிர்தலிங்கம்

(ஜப்பான் சின்னத்துரை)

வடக்குத்தெரு, தொண்டைமனாற்றைப் பிறப்பிடமாகவும் வி.எம்.றோட், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு அமிர்தலிங்கம் நேற்று (12.12.2002) வியாழக்கிழமை சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - தங்கம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும் யோகம்மாவின் அன்புக் கணவரும் அருந்தவரெத்தினம் (பிரதேச செயலகம், பருத்தித்துறை), இராசசிங்கம் (ஸ்பெயின்), யோகராணி, ஜெயராணி, இராசகுமாரன் (ஆங்கில போதனாசிரியர்,யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற செல்வக்குமாரன் (முன்னாள் ஆங்கில ஆசிரியர்), அமிர்தயோகம், சிவரூபன் (ஜேர்மனி), கமலக்கண்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கதிரமலை (பிரதேச செயலகம், பருத்தித்துறை), திருத்தணியநாதன், பிறேமலதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சசிகலா (கனடா), சர்மிளா, செல்வக்குமார், செந்தூரன், ஜெயேந்திரன் ஆகியோரின் அன்புப் பாட்டனும், சுரேந்திரனின் (கனடா) அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான கண்மணி, இரத்தினசிகாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு வி.எம். றோட், பருத்தித்துறையில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மடம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வி.எம்.றோட், பருத்தித்துறை.

தகவல்: அ.இராசகுமாரன் (மகன்)

(C/25379)


## விற்பனைக்கு வந்துள்ளன

மொத்த வியாபாரிகளுக்கும் கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும் கவர்ச்சிகரமான விலைக்கழிவு உண்டு

அழகும் தரமும் வாய்ந்த தரைப் பதிப்புக்கற்கள்

இத்துறையில் பிரசித்திபெற்ற நாடுகளான இந்தியா, இந்தோனேசியாவிலிருந்து விற்பனைக்கு வந்துள்ளன.

உங்கள் விருப்பத் தெரிவுகளுக்கமைய பலவர்ணக் கோலங்களிலும், தெய்வத் திருவுருவம், மலர்கள், இலை கொடிகள் பதிக்கப்பெற்ற கண்ணைக்கவரும் வண்ணக் கற்கள் ஏராளம்! ஏராளம்!! தேவைக்கு முந்துங்கள்!

ஏக விநியோகஸ்தர்கள்: AMT TRANSPORT SERVICE

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி, கோப்பாய், யாழ்ப்பாணம்.

T.P.: 0777 733473, 0777 686220

(1540)



வெளிவந்துவிட்டது!

"அஷ்டலக்ஷ்மி" தினத்தாள்

கலண்டருடன் 12 இராசிகளுக்குமான 2003ஆம் ஆண்டு புத்தாண்டு பலன் புத்தகம் இலவசம்!

கலண்டர் விலை ரூபா 170/-

✦ சேவை தினக்குறிப்பு ✦ Pocket Diary } தமிழில்

எம்மிடமும் கிடைக்கும்.

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,

(1571) கண்டி வீதி, கைதடி



# தேடல்

பல்துறை மாதாந்த இதழ்

பல் துறை ஆக்கங்கள் உள்ளடக்கிய காத்திரமான மாத இதழ். உங்கள் மாமு கன்னியிலிருந்து 2003 ஜனவரி முதல் வெளிவரவுள்ளது. தனிமனித விழிப்புணர்வை நோக்காகக் கொண்டு, சமூக பொருளாதார அரசியல் மேம்பாடு கருதி உங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு ஆக்கபூர்வமான ஆக்கங்கள் பலவற்றை எதிர்பார்க்கின்றோம்.

இவை ஒவ்வொரு துறைசார் ஆக்கங்களிலிருந்தும் வெளியிடப்படும் வகையில் பேராசிரியர்கள் ...

☞ கட்டுரைகள், சுருக்குகள், கவிதைகள், சிறுகதைகள், சிந்தனைச் சித்திரங்கள், அனுபவ மொழிகள், அறிவுரைகள், ஆய்வுரைகள், ஆலோசனைகள், விமர்சனங்கள், துணுக்குகள் போன்றவைகளாக அமையலாம்.

உங்கள் ஆக்கங்களை எம்மிடம் ... அனுப்பி வையுங்கள்.

☞ ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி

நிர்வாக ஆசிரியர் "தேடல்" 51, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.



# ஈசன் கல்வி நிலையம் A/L 2005

| வர்த்தகப் பிரிவு | கலைப் பிரிவு | கணிதப் பிரிவு | உயிரியல் பிரிவு |
| --- | --- | --- | --- |
| கணக்கீடு: திரு.பாலவாசன் | தமிழ்: திரு. S.J.ஜோகன் | இ. கணிதம்: திரு.ரவீந்திரன் | உயிரியல்: திரு.சிவசுதாகரன் / திரு.தயாபரன் |
| வணி. கல்வி: திரு.பசில் | இ. நாகரீ.: திரு. S.ஜெயக்குமார் | பௌதிகவியல்: திரு.குமரன் | பௌதிகவியல்: திரு.குமரன் |
| பொருளியல்: திரு.ராஜேஸ்வரன் | அளவையியல்: திரு. S.T.ராஜன் | இரசாயனவியல்: திரு.சிவநீதன் | இரசாயனவியல்: திரு.சிவநீதன் |
| வணி. புள்ளி.: திரு.தவசேகர் | புவியியல்: திரு. S.ஜெயக்காந்தன் | | |

ஆரம்பம்: 14.12.2002 (சனி) மாலை: 4.30 மணி

நிர்வாகி

(1609)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.